Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 11 வெள்ளிக்கிழமை (25-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:213

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு:

# கருணா விடயத்தில் படையினரா? விசாரணை நடத்துகிறதாம் அரசு!

### முக்கிய சூத்திரதாரி ரணில் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்25

**விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா விவகாரத்தில் அரச படைகள் சம்பந்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரிக்கப்படுகின்றது. அப்படி அவர்கள் தொடர்புடையவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

**- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.**

"தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி சமாதானப்பேச்சைக் குழப்பியடிப்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டம்.

"கருணா விவகாரத்தில் முக்கிய சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்கதான். ஐக்கிய தேசியக்கட்சியின் இரட்டை வேடம் இப்போது அம்பலமாகிவிட்டது. இவ்விடயத்தில் தொடர்புடைய பாதுகாப்புப் படையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் மீதான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன"- என்றார் அமைச்சர் மங்கள சமரவீர.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச

(16ஆம் பக்கம் பார்க்க)

### கருணா விவகாரத்தில் எனக்கு எதுவும் தெரியாது

#### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்25

கருணாவை, கொழும்புக்கு இராணுவப் புலனாய்வுப்பிரிவினரே பாதுகாப்பாக அழைத்து வந்தனர் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களின நம்பகத்தன்மை குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

- இப்படிக் கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் சிறில ஹேரத்.

நேற்று பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

கருணா விவகாரத்தில் படையினருக்குத் தொடர்பு இருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருப்பது தொடர்பாகக் கருத்துக்கூற எனக்கு எந்த உரிமையும் கிடையாது. ஆனால், பாதுகாப்பு அமைச்சைப் பொறுத்தவரையில் இதுபோன்று நடந்ததாகக் கூறப்படுவது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட இந்த விவகாரத்தில் முற்றிலும் தலையிடாக் கொள்கையையே கடைப பிடிக்கும்படி படையினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த விவகாரத்தில் தனிப்பட்ட வகையில் இராணுவ அதிகாரிகள் தொடர்புபட்டிருக்கலாம் என அமைச்சர் மங்கள சமரவீர என்னிடம் கூறினார். நான் அக்கருத்தை எதிர்க்கவோ, ஆதரிக்கவோ இல்லை.

அப்படி இருந்தால் அந்த அதிகாரிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்து அதன் பின்னர் ஏதாவது முறைப்பாடு கிடைத்தால் அது தொடர்பில் விசாரிக்கலாம் - என்று தெரிவித்தார் பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத். (ஐ-9-7)

#### இலங்கை - இந்தியா - விடுதலைப் புலிகள்

### முத்தரப்பு இராஜதந்திர ஓட்டத்தில் மீண்டும் நோர்வே அனுசரணைக் குழு

கொழும்பு,ஜூன்25

இலங்கை அரசு - இந்திய அரசு - விடுதலைப் புலிகள் என முத்தரப்பினரிடையேயான இராஜதந்திர ஓட்டத்தை (Shuttle Diplomacy) மீண்டும் ஆரம்பிக்கின்றது நோர்வே அனுசரணைக்குழு.

இலங்கை சமாதான முயற்சிகளில் அனுசரணைப்பணியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேக்குழுவின் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் திங்கட்கிழமை (28ஆம் திகதி) கொழும்பு வருகின்றார். அவர் அனேகமாக அடுத்தநாள் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த புதன்கிழமை (30ஆம் திகதி) கிளிநொச்சிக்கு செல்லும் அவர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடுவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலை ஊழியர் போராட்டம்: ஞாயிறுவரை இடைநிறுத்தும்

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 10 தினங்களாக மேற்கொண்டுவந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுமுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்திடம் சில கோரிக்கைகளை முனவைத்து கடந்த 15 ஆம் திகதிமுதல தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். இதனால், பலகலைக்கழக நாளாந்தச் செயற்பாடுகள பாதிக்கப்பட்டன.

இதனை அடுத்து இருபிரிவினர்களுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக மாணவர் ஒன்றியத்தினர் ஏற்பாட்டில் நேற்றுமுன் தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் ஊழியர் சங்கத்தினருக்கும் இடையில் சில இணக்கப்பாடு ஏற்பட்டது. அவை தொடர்பாக தமது பொதுச்சபை அங்கத்தவர்க

(16ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு என்பதில் இந்தியாவுடன் வேறுபாடு இல்லை என்கிறது அமெ.!

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் சமாதானத்தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும் என்ற விடயத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏதும் இல்லை.

- இவ்வாறு கொழும்புக்கான அமெரிக்கத் தூதர் ஜெவ்ரி ஜே.லன்ஸ டெட் தெரிவித்தார்.

இலங்கைத் தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுக்காலை கொழும்பு, காலி வீதி, அமெரிக்க மையத்தில் அவர் சந்தித்து உரையாடினார். அப்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது பத்திரிகை ஆசிரியர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து மட்டுமே பேச்சு நடத்தமுடியும் என்று புலிகள் வற்புறுத்துகின்றார்கள். அது சம்பந்தமான தமது யோசனைகள் குறித்து மட்டுமே பேசமுடியும் என்று புலிகள் கூறுவதால் சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டிருக்கின்றன. புலிகளின இந்த நிலைப்பாட்டைக் கண்டிக்க அமெரிக்காவும், உதவும் நாடுகளின் இணைத் தலைமையும் பின்னிற்பதேன்?" -என்று ஆங்கில தினசரி ஒன்றின் ஆசிரியர் கேள்வி எழுப்பினார். அதற்கு அமெரிக்கத் தூதர் பதிலளித்தார்.

"இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. அதனை நீங்கள் குழப்பிக்கொளளக் கூடாது. நான் புலிகளுக்காகப் பேசவில்லை. இடைக்கால நிர்வாகம் குறித்து பேச முன்வருவது வேறு. புலிகள் சமர்ப்பித்த யோசனை குறித்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### கட்டடம் இடிந்து இருவர் மரணம்!

கொழும்பு, புறக்கோட்டை, நான்காம் குறுக்குத் தெருவில் அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த நான்கு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர்; பதினைந்து பேர் காயமடைந்தனர்; அருகில் இருந்த இரு கடைகளும் சேதமடைந்தன.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றது. காயமுற்றோர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் வாகனங்கள் இரவுவேளை முகமூடி நபர்களால் தீக்கிரை!

#### தரிப்பிடத்தில் புகுந்து தாக்குதல்! காவலர்கள் காயம்!!

யாழ்ப்பாணம்,ஜூன்25

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் 'ஹலோ ரஸ்ட்' என்ற பிரிட்டிஷ் நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்கள் சில நேற்று அதிகாலை வேளை கும்பல் ஒன்றினால் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

முகத்தைக் கறுப்பு முகமூடிகளால் மறைத்தபடி காணப்பட்டனர் என்று கூறப்படும் கும்பல் ஒன்று நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தினுள் புகுந்து கடமையில் இருந்த காவலர்களைத் தாக்கிவிட்டு வாகனங்களைத தாக்கி அவற்றிற்குத் தீவைத்தது என்று கூறப்படுகிறது.

**படங்கள்: இரண்டாம் பக்கத்தில்**

யாழ்.குடாநாட்டில் கடந்த சில வருடங்களாக 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின தரிப்பிடம் நல்லூர் குறுக்குத் தெருவில் அமைந்துள்ளது.

அத்தரிப்பிடத்திற்குள் அதிகாலை ஒரு மணியளவில் முகமூடி அணிந்து கறுப்பு உடையில் அத்துமீறி நுழைந்த சுமார் 20 பேர் கொண்ட கும்பல் அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த நான்கு ஊழியர்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.
- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

இப்போது பவுனுக்கு ரூ.9000/-








நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் எரியூட்டப்பட்ட 'ஹலோ ரஸ்ட்' கண்ணி அகற்றும் நிறுவனத்தின் வாகனங்களையே படங்களில் காண்கிறீர்கள். நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே வாகனங்கள் எரிக்கப்பட்டன.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# யுத்த நடவடிக்கையில் பலியானோரின் விவரம் திரட்டுகிறது எழுச்சிப்பேரவை

கொழும்புத்துறை,ஜுன்25

யுத்த நடவடிக்கைகளின்போது உயிரிழந்தவர்கள், படுகொலை செயயப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனோரின் விவரங்களை கிராம அலுவலர்களின் உதவியுடன் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் திரட்டிவருகின்றனர்.

ஒவ்வொரு தேசிய எழுச்சிப்பேரவை ஊரகக் கிளையும் அந்தப்பகுதி கிராம அலுவலருடன் இணைந்து 1974 ஆம ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற உயிர் அழிவு, அழிப்பு சம்பந்தமான தரவுகளைத் திரட்டுகிறது.

யுத்த நடவடிக்கைகளின்போது அரசபடைகள், இந்திய அமைதிப் படை மற்றும் தேசவிரோதக் குழுக்களினால் படுகொலை செய்யப்பட்டோா, காணாமற் போனோர் தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தவர், உறவினர்கள் தேசிய எழுச்சிப்பேரவையினரிடம தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்கள சமாதான நீதிவானால் உறுதிப படுத்தப்பட்டு சத்தியக்கடதாசி ஆவணங்களாக பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த ஆவணப்படுத்தலின் மூலம சர்வதேச ரீதியில் தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகள் தொடர்பான துல்லியமான தரவுகளை வெளிப் படுத்தவும் சமாதான நகர்வுகளை நிலையானதாக மாற்றவும்முடியும் என யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் தெரிவித்தார்.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த கிராம தேசிய எழுச்சிப்பேரவை மற்றும் கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-30)

# யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்துக்கு தேவையான நிதியை ஒதுக்க இணக்கம்

## புதிய பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார் எனத் தகவல்

யாழ்ப்பாணம்,ஜுன்25

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதாக உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கலாநிதி ஏ.எல்.உபயசேகர உறுதிமொழி வழங்கியுள்ளார்.

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் த.இராஜரட்ணம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தமாத முற்பகுதியில் கலாநிதி ஏ.எல்.உபயசேகர உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவரைத் தாம் அண்மையில் சந்தித்துப்பேச்சு நடத்தியதாகவும் -

இதன்போது உயர் தொழில்நுட்ப நிறுவனம் எதிர்நோக்கும் பல்வேறு வசதியீனங்கள் குறித்து அவரிடம் எடுத்துக்கூறியதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் தேவைகள் - வசதியீனங்களைக் கேட்டறிந்த புதிய பணிப்பாளர் -

இனிவரும் காலங்களில் யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்கவும், உபகரண வசதிகளை வழங்கவும் ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் என பணிப்பாளர் த.இராஜரட்ணம் கூறினார்.

அடுத்த ஆண்டளவில் தேசிய தகவல் தொழில்நுட்ப பயிற்சியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (எ-6)

### அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுன்25

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் நடத்தப்பட்டுவரும் சமகால அரசியற் கருத்தரங்கின் 11 ஆவது தொடர் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் 'ஈழ விடுதலைப் போராட்டமும் எதிரான ஊடகங்களின் உளவியல் யுத்தமும்' என்ற தலைப்பில் ச.ராதேயன் கருததுரை வழங்குவார். (எ-ரி)

### விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் கொட்டடி மீன் சந்தைப்பகுதியில் டொல்பின் வான ஒன்றுக்கும், சைக்கிள் ஒன்றுக்கும் இடையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் சைக்கிளைச் செலுத்திச் சென்ற மீன் வியாபாரியான யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணநாதன் ஈசன் (வயது29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சந்தையில் மீன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டபோதே விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைததியசாலையில் சேர்கககப்பட்டுள்ளார். (எ-15)

# ரவியைக் கைதுசெய்ய பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு,ஜுன்25

முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்காவை கைது செய்வதற்கு பிடிவிறாந்து உத்தரவு வழங்குமாறுகோரி பொலீஸார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிவான் நிராகரித்தார்.

நேற்று முன்தினம் ரவி கருணாநாயக்காவை அடாத்தாக கைதுசெய்ய பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியில் முடிந்தமையால் அவரைச் சட்டப்படி கைது செய்வதற்கு அனுமதி கோரி கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று மனுவொனறைத் தாக்கல் செய்தனர்.

கடந்த ஐ.தே.முன்னணி அரசில் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சராகப் பதவிவகித்தபோது ஒரு கோடி 56 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டியே, ரவி கருணாநாயக்க எம்.பியைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்து உத்தரவு கோரப்பட்டிருந்தது.

எனினும், ரவி கருணாநாயக்க எம்பி மோசடியில் ஈடுபட்டமைக்கான சான்று ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அம மனுவை நீதிவான் நிராகரித்துவிட்டார்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுன்25

வட்டுக்கோட்டை தெற்கு பேச்சி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் பெரு விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 9 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு விசேட பொங்கல் பெருவிழாவும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர்மடையும் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

காரைநகர்,ஜுன்25

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனி உத்தர நடேசர் அபிசேகம இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4மணி தொடக்கம் இடம்பெற்று காலை 6 மணிக்கு ஆனி உத்தர தரிசனம் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நடராஜப் பெருமான் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (10-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்25

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ள சேர்.பொன். இராமநாதேஸ்வரப் பெருமான் ஆலயத்தின் மணவாளக்கோலத திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (10-13)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜுன்25

மாதகல் பேச்சியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும். (10-135)

★ ★ ★

யாழ்.அத்தியடி சிதம்பர நடராஜ பிள்ளையார் ஆலயத்தின் ஆனி உத்தரத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணியளவில் விசேட பூசை, ஆராதனைகள் நடைபெற்று நடராஜப் பெருமான் திருவீதிவலம் வருவார்.

நண்பகல் 12 மணியளவில் மகேஸ வரபூசை இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்25

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-13-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்25

அல்லைப்பிட்டி, மண்கும்பான் சின்னக்காடு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி நாளை மாலை 5 மணிக்குத் திருச்செபமாலையும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாட் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும். (10-ரி)

★ ★ ★

வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலய கும்பாபிசேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனையொட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்25

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிசேகம எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பக்தர்களின் நலன்கருதி காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியிலிருந்து விசேட மினிபஸ் சேவையொன்றும் 7.30 மணிக்கு கண்ணகை அம்மன் துறைமுகத்திலிருந்து படகுச் சேவையும் இடம்பெறவுள்ளது என ஆலய அறங்காவல் சபையினர் தெரிவித்துள்ளனர். (10-ரி)

### தாய்க்கும் மகனுக்கும் கத்திக் குத்து

யாழ்ப்பாணம்,ஜுன்25

தாயும் மகனும் கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்திருக்கின்றனர். உறவினர் ஒருவரே இவர்களைக் கத்தியால் குத்தினார் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுக்காலை கல்வியங்காடு மூன்றாம் கட்டைப பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச சேர்ந்தவர்களான பாலச்சந்திரன் சீதாலட்சுமி (வயது50) அவருடைய மகனான பாலச்சந்திரன் முரளிகாந்த் (வயது18) ஆகிய இருவருமே கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர். இருவரும் யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சில நாள்களாக இருந்து வந்த தகராறே இதற்குக் காரணம் எனக கூறப்படுகின்றது. (ஐ-6)

### குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல் குறித்து இன்று கூட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கண்காணிபபுக் குழுவின் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும இந்தக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம சேவையாளர்கள் மற்றும் பொதுமக்கள், பொலீஸார் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-139)

### பாராட்டுவிழா

வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயத்தின தற்போதைய அதிபருமான பொ.அருணகிரிநாதனின் சேவையைப் பாராட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வேலணை சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் பாராட்டுவிழா ஒன்று நடைபெறவுள்ளது. சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி வி.நாவேந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். (எ-ரி)



யாழ்.றோட்டறிக் கழகத்தின் அதிதி பேச்சாளர் தினம் நேற்றுமாலை 'உதயன்' பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். அதிதியாகக் கலந்துகொண்ட ஐக்கிய இராஜ்ஜிய லிஸ்ரர் மருத்துவமனை ஆலோசகரும் நோவுகள் சிகிச்சை முகாமைத்துவம் மற்றும் மயக்க மருந்தூட்டல் துறைகளில் நிபுணருமான எஸ்.ஜோதிலிங்கம் 'நோவுகள் சிகிச்சை முகாமைத்துவம்' என்னும் தலைப்பில் அதிதியுரை நிகழ்த்துவதையும் யாழ்.றோட்டறிக்கழகத்தின் தலைவர் றோட்டேரியன் கே.சுரேந்திரன் அமர்ந்திருப்பதையும் 2004ஆம் ஆண்டுக்கான தெரிவு செய்யப்பட்ட தலைவர் றோட்டேரியன் ஈ.சரவணபவன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

உதயன்

## விசாரணை நடக்குமா?

தனது 41 நாள் அராஜகத் தர்பாரை முடித்துக் கொண்டு, மட்டக்களப்பை விட்டு 'தம்பித்தோம், பிழைத்தோம்' என கருணா ஓடித்தப்பி இரண்டரை மாதங்களாகி விட்டன. அவரது கொட்டம் அடங்கி விட்டாலும் அவர் கிளப்பிச் சென்ற சூறாவளிச் சின்னத்தின் குழப்பங்கள் அடங்கவில்லை. மழை அடங்கியும் தூவானம் விடாதது போல விடயங்கள் தொடர்கின்றன.

அவர் கிளப்பிய குழப்பத்தில் இப்போது கடைசியாகப் பலிக்கடா ஆகியிருப்பவர் ஐ.தே.கட்சித் தேசியப் பட்டியல் எம்.பியான அலி ஸாஹிர் மௌலானா.

தன்னுடைய கட்சியையும் தலைமையையும் பாதுகாப்பதற்காக அவர் தனது பதவியைத் துறந்திருக்கிறார். அது மட்டுமன்றி இது விடயத்தில் பிழைகள், தவறுகள் சகலவற்றுக்கும் தாமே பொறுப்பேற்கிறார் என்று குறிப்பிட்டதோடு, கட்சிக்கோ, தலைமைக்கோ எதுவும் தெரியாது என்பதுபோல பெரும் கனவான் தனத்துடன் அறிக்கைகளையும், கருத்துக்களையும் வெளியிட்டு தமது பெருந்தன்மையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

எடுத்த எடுப்பில் - மேலோட்டமாகப் பார்த்தால் - கருணா விவகாரத்தில் ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைமைக்கும் எதிராக அம்புபோல சீறி வந்த இழுக்கு 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனமாதிரி' அலி ஸாஹிர் மௌலானாவின் பதவி துறப்போடு அடங்கிபோய்விட்டதாகவே படும்; தோற்றும்.

ஐ.தே.கட்சியின் 'தலை'வர் ரணிலுக்கு எதிராக எழுந்த குற்றச்சாட்டு, அவருக்கு மிக நெருக்கமானவராகவும், கிழக்கு விவகாரங்களில் அவருக்கு ஆலோசகராகவும் 'தலைப்பாகை' போன்றும் விளங்கிய அலி ஸாஹிர் மௌலானாவின் பதவி உருண்டதோடு அடங்கிப் போய் விட்டதாகவே பலரும் கருதுவர்.

ஆனால், விடயம் அப்படிக்கொள்ளத்தக்கதல்ல. இந்த விவகாரம் தொடர்பாக ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைமைக்கும் எதிராகத் தமிழர் தரப்பின் மனதில் ஆழமாகப் பதிந்த வடு இலகுவில் மறையக் கூடியதல்ல. அந்த வடுவை - அது ஏற்படுத்திய சந்தேகத்தை - கசப்புணர்வை - மன நெருடலை - களைவதற்கும் நீக்குவதற்கும் ஐ.தே.கட்சியும் அதன் தலைமையும் இனிமேலாவது இதயசுத்தியுடன் பல்வேறு கருமங்களை சிரத்தை எடுத்து ஆற்ற வேண்டியிருக்கும் என்பதுதான் உண்மை.

மட்டக்களப்பை விட்டு 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்று ஓடிய கருணா, கொழும்பில் இருந்து கொண்டு கிழக்கில் புரிந்த அலங்கோலங்கள், அவலச் செயல்கள் பலப்பல, அவற்றுக்கெல்லாம் யார் காரணம் - பின்னணி - தூண்டல் - என்பது இன்னும் பகிரங்கமாக அம்பலப்படுத்தப்படவில்லை.

பெரும்பான்மைச் சிங்களவரின் பெரிய கட்சிகள் இரண்டுமே இது விடயத்தில் தங்களை ஒன்றுமறியா நற்சீலர்களாகக் காட்ட முயல்கின்றன. தவறிழைத்தவர்களை அடையாளம் கண்டு தண்டிக்கப் போகின்றவை போல வேடம்போடுகின்றன.

இதுதொடர்பாக இந்த இரண்டு கட்சிகளுமே விசாரணை நடத்தப் போவதாக அறிவித்திருப்பது முக்கிய திருப்பமாகும்.

கருணாவிடயத்தில் அலி ஸாஹிர் மௌலானாவின் பங்களிப்புக் குறித்து விசாரணை நடத்தப்போவதாக ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது. அலி ஸாஹிர் மௌலானாவின் செயற்பாடு குறித்து மட்டுமல்லாமல் அதற்கு அப்பால் கட்சியின் மேல் மட்டத்தின் பங்களிப்புக் குறித்தும் விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்துவதோடு கட்சி ரீதியாக எடுக்கப்பட்ட - நியாயமான - நடவடிக்கையை தமிழர்களுக்குத் தெரியப்படுத்துவதும் அவசியம். அப்போதுதான் தமிழர் தரப்பில் இழக்கப்பட்ட நம்பிக்கையை ஐ.தே.கட்சி மீண்டும் கட்டி வளர்க்க முடியும்.

அதேபோன்று கருணாவின் செயற்பாட்டில் தங்களுக்குத் தொடர்பேதுமில்லை என்று கையைவிரித்து, தங்கள் கை சுத்தமானது எனக் காட்டமுயலும் அரசுத் தரப்பு - குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தரப்பு இந்த விடயத்தில் படையினர் சம்பந்தப்பட்டிருந்தால் அது குறித்து விசாரிக்கப்படும் என உறுதியளித்திருக்கின்றது.

கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்து அவர் மூலம் கிழக்கில் பல குளறுபடிகளைச் செய்வித்ததில் இராணுவத்திற்கு கணிசமான பங்கு உள்ளது என்று தமிழர்கள் திடமாக நம்புகிறார்கள்.

இந்நிலையில், ஆளும் தரப்பு தனது கை சுத்தம் என்று கைவிரிக்கின்றது என்றால், அரசையும் ஆளும் தரப்பையும் மீறி படைக்குள் ஓரணி கருணா விடயத்தை கையாண்டிருக்கின்றது என்றே அர்த்தம்.

அது உண்மையானால் நாட்டைப் பொறுத்தவரை மிக மோசமான - பாரதூரமான - அபாயகரமான - ஆபத்தான நிலைமை இது. இத்தகைய போக்கை முளையிலேயே கிள்ளாவிட்டால் இத்தகைய ஒளிவு மறைவு, பாதாள நடவடிக்கைகளால் அனுமானிக்க முடியாத பேராபத்துக்களை - விளைவுகளை - நாடு சந்திக்க நேரிடும் எனபது நிச்சயம்.

எனவே, அரசுத் தரப்பு நடத்தப்போவதாகக் கூறும் விசாரணையும் அதன் முடிவுகளும் கூட மிக முக்கியமானவையாகும்.

இந்த விசாரணைகள் நியாயமாக நடக்குமா, பெறுபேறுகள் வெளியாகுமா, நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையெல்லாம் பொறுத்திருந்து பார்ப்போமே!

# 'லைசென்ஸ்' இல்லாதவர்கள் செலுத்தும் வாகனத்தின் உரிமையாளர் மீதும் வழக்கு!

## கோப்பாய் பொலீஸ் பொறுப்பதிகாரி எச்சரிக்கை

வலி.கிழக்கு,ஜூன்25

சாரதி அனுமதிப் பத்திரம் பெறாதவர்கள் வாகனங்களைச் செலுத்துவதற்கு அனுமதிக்கும் வாகன உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று வாகன சோதனையில் பொலீஸார் ஈடுபட்டனர். அப்போது பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டது. அதனைச் செலுத்தி வந்தவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதது அப்போது தெரியவந்தது.

இதனையடுத்து பயணிகளுக்கு விளக்கமளித்து பொலீஸார் அவர்களை வேறு பஸ்ஸில் ஏற்றி அனுப்பினர். பின்னர் மினி பஸ்ஸை பொலீஸ் நிலையம் கொண்டுவந்து சாரதி மீதும் அதன உரிமையாளர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல், பலர் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களைச் செலுத்துகின்றனர். இவர்களை நம்பியே பயணிகள் அந்த வாகனங்களில் பயணம் செய்கின்றார்கள். இச்சாரதிகள் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில் விவரம் தெரியாதவர்களாக உள்ளனர்.

இதனால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு பயணிகள் உயிரிழப்புக்களைக்கூடச் சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே, வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகளிடம் ஒப்படைப்பது கட்டாயம் ஆகும் - என்றார் அவர். (ஒ-180)

# வீதியோரம் பொருள்களை வைக்கும் கடை உரிமையாளர் மீது நடவடிக்கை

## உள்ளூராட்சி அதிகாரிக்கு அரச அதிபர் கடிதம்

கொக்குவில்,ஜூன்25

தங்கள் வியாபாரப் பொருள்களை போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில் காட்சிப்படுத்தும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பணிப்புரைவிடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்ற சிறு வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, அனுமதிபெற்ற வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தங்கள் வியாபாரப் பொருள்களை வியாபார நிலையத்திற்கு முன்பாக வீதியோரமாக நடைபாதையில் பரப்பிவைத்து விற்பனை செய்கின்றனர்.

இது விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஒரு காரணமாக உள்ளது. இவ்வகையான செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். இதனைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே, இது விடயமாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்ட ஏற்பாடுகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அனுசரிக்கத் தவறும் வியாபார உரிமையாளருக்கு எதிராக சட்டநடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்நடவடிக்கைகள் பொதுமக்கள் நன்மை கருதி எடுக்கப்படுகின்றது என்பதில் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் உரிய அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி தொடர்ச்சியாக அவற்றை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞ-76)

# கரும்புலிகள் தினத்தை ஒட்டி மாணவருக்கு உபகரணங்கள்

வடமராட்சி,ஜூன்25

கரும்புலிகள் நினைவாக வடமராட்சியில் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்க கரும்புலிகள் நினைவுதின ஏற்பாட்டுக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கென வடமராட்சிப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டுக்குள் வாழும் மாணவர்களை அதிகமாகக் கொண்ட பாடசாலை ஒன்றைத் தெரிவுசெய்து அப்பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படும் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த பாடசாலையைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-173)

# முதியோர் இல்லத்தில் பணியாற்றுகின்ற தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தற்காலிகமாகக் கடமையாற்றிவரும் 26 ஊழியர்கள் விரைவில் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

இவர்களை நிரந்தரமாக்குவதற்கான அனுமதியை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன வடக்கு - கிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து அனுப்பிவைக்கும் நடவடிக்கையை கைதடி அரச முதியோர் இல்லத்தின் பொறுப்பாளர் கே.வி.சிவனேசன் மேற்கொண்டுள்ளார்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில் -

கைதடி முதியோர் இல்லத்தில் 38 ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் 12 பேர் மட்டுமே நிரந்தர ஊழியர்கள் மிகுதி ஊழியர்கள் நீண்டகாலமாக நிரந்தரமாக்கப்படாத நிலையில் தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரிந்துவருகின்றனர்.

தற்போது வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினி ஆளுநருடன் நேரடியாகக் கலந்துரையாடியதையடுத்து இவர்களை நிரந்தரமாக்குவதற்கான அனுமதியை ஆளுநர் வழங்கியுள்ளார். எனவே, இவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் விரைவில் கிடைக்கும் - என்றார்.

இதேவேளை -

கைதடி முதியோர் இல்லத்தில் கைத்தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த மாதமளவில் இந்த தொழிற்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்படுமெனவும் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்கள் இதில் கைத்தொழில் பயிற்சிகளைப் பெறுவார்கள் எனவும் முதியோர் இல்லப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார். (8-75)

# குடாநாட்டில் விலங்குகளுக்கு கால் வாய்ப்புண் நோய் அபாயம்

குடாநாட்டில் கால்நடைகளுக்கு கால் வாய்ப் புண் நோய்கள் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் வளர்க்கப்பட்டு வந்த மாடு ஒன்றிற்கு இந்த நோய் பீடித்துள்ளதாக சாவகச்சேரி மிருக வைத்திய நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

'அத்தே' எனும் வைரசினால் ஏற்படும் இந்நோயானது காற்றின மூலம் மிக விரைவாக ஏனைய விலங்குகளுக்குப் பரவக்கூடியது என்று திருநெல்வேலியில் அமைந்துள்ள விலங்குகள் புலனாய்வு நிலையம் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.புவிராஜன் தெரிவித்தார்.

வீட்டு விலங்குகளில் காணப்படும் கொப்பளம், வாய் அவிச்சல் மற்றும் முலைக்காம்புகளில் காணப்படும் மாற்றங்களுக்கு உடனடியாக மிருக வைத்திய நிலையத்தை நாடி சிகிச்சையை மேற்கொள்ளுமாறும் -

இல்லையேல் ஏனைய விலங்குகளையும் இந்நோய் தாக்கும் என்றும் - அவர் தெரிவித்தார். (ஒ-6)

### நாளை

ஆனி 12
சனிக்கிழமை
(26.06.2004)
திதி: அட்டமி
காலை 7.49 வரை.
நட்சத்திரம்: அத்தம்
இரவு 7.22 வரை
சுபநேரம்:8.55 - 10.25
ராகுகாலம்: 2.52 - 4.25
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிந்தனைத் தேரை விரக்திப் பாதையில் ஓட விடுவது எமக்குக் கொஞ்சமும் நல்லதல்ல.

# புற்றுநோயாளருக்குக் கருணைநிதி

யாழ்ப்பாணம்,ஜூன்25

புற்றுநோயாளர்களுக்கான கருணை நிதி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளது என செஞ்சொற்செல்வர் ஆறு.திரு முருகன் அறிவித்துள்ளார்.

லண்டன் சிவயோகம் அறக்கட்டளை சார்பில் லண்டன் முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள உண்டியலில் சேரும பணத்திலிருந்து இவ்வருடம் புற்றுநோயாளருக்கான கருணை நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி வழங்கும் வைபவத்தில் யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் க.குகதாசனும், யாழ். போதனாவைத்தியசாலைக் கணக்காளர் மு.விஜயரகுநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தம்மை அத்தாட்சிப்படுத்தி இந்த நிதியினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். (ஒ-13)

# மானிப்பாயில் நூலகவியல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்25

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் நூலகவியல் தொடர்பயிற்சி நெறிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணி வரை மேற்படி நூலகவியல் பயிற்சி பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுளள்து.

நான்கு உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள், நூலகர்கள், உதவி நூலகர்கள், நூல்சேவகர்கள், நூலக தொழிலாளிகள், பதில் நூலக தொழிலாளிகள் ஆகியோர் மேற்படி நூலகவியல் பயிற்சியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அலுவலர் ம.ஞானவேல்ராஜா தலைமையில் இடம்பெறும் இந்தப் பயிற்சி நெறியில் - நூலக சேவையில் நீண்டகாலம் பணிபுரிந்த அதிகாரிகள் பலர் விரிவுரையாற்றவுள்ளனர். (ஒ-185)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

உடுவில் தெற்கு, மானிப்பாயில் (புதுமடம்) அமைந்துள்ள 5 அறைகள் மற்றும் குசினி, 2 குளியலறைகள் முதலான சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:T.P.:021 4590906, 0776553086. (33367)

இல.17, சுவாமியார் வீதியில் சென். ஜோசப் பாடசாலை, கத்தோலிக்க மிஷனுக்கு அருகில் வீட்டுடன்கூடிய 2¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இராஜேஸ்வரி, இல.16, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (33452)

### தேவை

ஓய்வூதியம் பெறும் தம்பதியினருக்கு (இருவர்), யாழ். மாநகர சபையை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம்: 2310, உதயன், யாழ்ப்பாணம். (33449)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 31 வயதுடைய, அச்சுவினி நட்சத்திர 14¼ பாவமுடைய, செவ்வாய்க்குற்றமற்ற, அரச வங்கி ஒன்றில் பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்குப் பொருத்தமான படித்த, அரச / தனியார் துறைகளில் சேவை செய்யும் மணமகன் தேவை. சாதகம் மற்றும் விவரங்களுடன். விளம்பர இல. 2310, மே/பா. உதயன். (33433)

## கள்ளநோட்டு மாற்றிய நபர் கண்டியில் கைது!

கொழும்பு,ஜூன்25

கண்டி பஸ்நிலையத்தில் கள்ள நோட்டுக்களை மாற்றிக் கொண்டிருந்த நபரொருவர் கண்டிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 500 ரூபா கள்ளநோட்டுக்கள் பல அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மதிரிகிரியப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் ஏற்கனவே பெருந்தொகையான கள்ள நோட்டுக்களை இவ்வாறு மாற்றியிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகக் கண்டிப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த கள்ள நோட்டுக்கள் விசாரணைக் குழுவிடம ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-ரி)

## திறனாய்வுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்25

தென்மராட்சி முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வலய முன்பள்ளிகளின் இவ்வாண்டுக்கான மெய வன்மைத் திறனாய்வுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா தலைமையில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (10-ரி)


### வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல. 7, சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோயிலடியில் 3½ பரப்புக் காணியில் மூன்று அறை, மண்டபத்துடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
இல.43, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.222 5102
(யாழ் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மையில்)

### விற்பனைக்கு

ஹோட்டல், கிறீம்ஹவுஸ் என்பவற்றிற்குத் தேவையான சோக்கேஸ், மேசைகள், கதிரைகள் Deepfreeser, கோப்பி வறுக்கும் மின்சார இயந்திரம் (Coffee roster), கோப்பி அரைக்கும் இயந்திரம் (Coffee Grinder), மின் விசிறிகள், சமையல் பாத்திரங்கள் உட்பட அனைத்துத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-
மு.விமலநாதன்
இல.370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம
(சி35775) (37-19-18-24)


## ரூபா 25,000 கொடுப்பனவு

வலி.கிழக்கு,ஜூன்25

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வலி.கிழக்குப் பிரதேசத்தில் மீளவும் குடியமர்ந்தவர்களுக்கான 25ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான படிவத்தில் கையொப்பமிடாத பயனாளிகளிடம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குக் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் வைத்து கையொப்பங்கள் பெறப்படவுள்ளன என்று உதவிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் அஞ்சலிதேவி தெரிவித்தார். (ஒ-72-180)


### கண்ணீர் அஞ்சலி



கரைச்சி தெற்குப் ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளரும், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசப் பொது முகாமையாளருமாகிய

திரு. சி.சிவபாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி சி.வசந்தராணி**

அவர்கள் 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தயதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். இவரது மறைவால் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களது துயரில் நாமும் இணைந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கிச் சமர்ப்பிக்கின்றோம்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
சாவகச்சேரி. (C/35791)(19-18-24)

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

### 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 03 - 1925



மறைவு 01 - 07 - 1998

**திருமதி நல்லதம்பி புனிதவதி**

ஆறு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவு தினமும் எமது உள்ளங்களில் நிறைந்திருக்கும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு. (33456) (24-19-18)

- குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECHஇன்

# இலவச ஆங்கில நேரடி வகுப்பு

### ஒரு மணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்

சந்தேகம் வேண்டாம். 2, 3 வயதில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கும் ஆங்கிலக் குழந்தைகளுக்கு இலக்கணம் தெரியாது. ஆங்கிலத்தில் உள்ள 200, 300 சொற்களே தெரியும். அதைவிட அதிகமான சொற்கள் உங்களுக்குத் தெரியும். ஒரு மணி நேரத்தில் உங்களால் ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்.

**இதுவரை முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் பயிற்சிபெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி**

இடம்: றிம்மர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ். மத்திய கல்லூரி அருகில், யாழ்ப்பாணம்.
காலம்: 26.06.2004, 27.06.2004 மற்றும் 28.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

**வகுப்புகள் (ஏதாவது ஒரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)**

காலை 9.00 முதல் 10.00, காலை 10.00 முதல் 11.00,
மாலை 2.00 முதல் 3.00மாலை 3.00 முதல் 4.00,
மாலை 4.00 முதல் 5.00, மாலை 5.00 முதல் 6.00.

குறிப்பு: ஞாயிற்றுக்கிழமை 9.00 மணி - 11.00 மணி வகுப்பு நடைபெறமாட்டாது.

## அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள்

**அனைவரும் கலந்துகொள்ளலாம்.**

**கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.**

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புகளில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## Psalm Institute of Engineering and Technology

22- 1/4, Galle Road, Dehiwala.

Ph.: 071-4104100, 011-5559222.

(C-35793)(24-19-12)

அதிகாலையில் கிளர்ச்சியாளர்கள் அதிரடி

# ஈராக்கின் நான்கு நகரங்களின் மீது அலை அலையாகத் தாக்குதல்கள்!

## 75 பேர் பலி! 216 பேர் காயம்!!

பக்தாத்,ஜூன்25

**ஈராக்கின் 4 நகரங்கள் மீது கிளர்ச்சியாளர்கள் நேற்று அதிகாலையில் ஒரே நேரத்தில் கார்க் குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்கள். இத்தாக் குதல்களினால் ஈராக் நேற்று அதிர்ந்தது.**

**இத்தாக்குதல்களின்போது 75 பேர் கொல்லப்பட்டதுடன் 216 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

கொல்லப்பட்டவர்களில் 3 பேர் அமெரிக்கப் படையினர் என அமெ ரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலூஜா, ரமாடி, மொசூல், பக்குபா ஆகிய 4 நகரங்கள் மீதே இத்தாக் குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மிக மோசமான தாக்குதல் ஈராக் கின் வடக்கு நகரான மொசூலில் நடை



வீதிகளில் கிடக்கும் சடலங்கள்...

பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலில் 44 பேர் பலியாகியுள்ளனர்.

நேற்று அதிகாலைவேளையில் ஒரே சமயத்தில் 4 நகரங்கள் மீதும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை ஆரம்பித்தார்கள். தாக்குதலின்போது இரண்டு பொலீஸ் நிலையங்கள் முற் றாகச் சேதமடைந்தன. பொலீஸ் நிலையங்களுக்கு முன்னால் சக்தி வாய்ந்த கார்க்குண்டுகள் வெடித் துள்ளன.

அத்துடன், வைத்தியசாலை மற றும் அரச கட்டடங்கள் பலவும் கிளர்ச்சி யாளர்களின் தாக்குதலுக்கு இலக் காகின.

அதிகாலை 5.30 மணியளவில் கறுப்பு முகமூடி அணிந்த ஆயு ததாரிகள் தமது படைகள் மீது மோட்டார்க் குண்டுகளை வீசித் தாக்குவ தாக அமெரிக்க இராணுவ அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கின் பலூஜா நகரில் கிளர்ச்சியா ளர்களுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையே சண்டை தொடர்ந்து கொண் டிருக்கின்றது. இதனால், அங்குள்ள மக்கள் பாதுகாப்புத் தேடி வெளியே றிக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சியான தாக்குதலை யடுத்து பக்குபா நகரின் பிரதான வீதியைக் கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுபாட்டின் கீழ் கொண்டு வந்துள் ளார்கள் என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி அமெ ரிக்கா, இடைக்கால நிர்வாகத்தை ஈராக்கிடம் கையளிக்கவுள்ளது. இதற்கிடையில் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை மேலும் அதிகரிக்க லாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஈராக்கின் அனைத்துப் பகுதிகளி லும் அமெரிக்கப் படையினரும் பொலீ ஸாரும் உசார்நிலையில் வைக்கப் பட்டுள்ளனர். (ப-8)



கிளர்ச்சியாளர்களின் கார்க்குண்டுத் தாக்குதலின் கோரம் இந்தப் பொலீஸ் நிலையக் கட்டடத்தை பார்க்கும்போது புரிகிறது.

# ஈராக் இடைக்காலப் பிரதமருக்கு அல்கெய்டா கொலை மிரட்டல்!

ஈராக்கில் இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள இயட் அல்லவியைக் கொல்லப்போவ தாக அல்கெய்டாவுடன் தொடர்பு டைய அபுமுசப் அல் ஜர்காவி என்ற தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத் துள்ளது.

அண்மையில் தென்கொரியாவைச் சேர்ந்த ஒருவரைத் தலைவெட்டிக் கொலைசெய்த இந்த அமைப்பு இப் போது இடைக்காலப் பிரதமருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒலிப்பதிவு நாடா ஒன்றை அது இயட் அல்லவிக்கு அனுப்பிவைத்துள்ளது.

அல்லவியை 'துரோகிகளின் பிறப் பிடம்' என்றும் 'தீமையின் சின்னம்' என்றும் வர்ணித்துள்ள அந்த அமைப்பு அவரைக் கொலைசெய்யப் பல முறை முயன்றதாகவும் தெரிவித் துள்ளது.

அந்த ஒலி நாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மிஸ்டர் அல்லவி - மன்னிக்கவும், ஜனநாயக முறைப்படி தேர்வு செய் யப்பட்ட பிரதமர் அவர்களே - உங் களை விஷம் அல்லது கத்தியை பயன்படுத்திக் கொல்ல முடிவு செய் துள்ளோம். நீங்கள் தீமையின் பிரதி நிதியாக இருக்கின்றீர்கள். ஆப்கா னிஸ்தான் அதிபர் ஹமீத் கர்சாய் அமெரிக்காவின் அடிமை போன்று, சேவகன் போல இருந்து வருகிறார்: இப்போது நீங்களும் ஈராக்கின் கர்சாயாக உருவாகி விட்டீர்கள்- என்றுள்ளது. (8)

# விஜயகாந்த் அரசியலில் குதிக்கிறார்; 'தமிழ்கழகம்' என்ற பெயரில் கட்சி

சென்னை,ஜூன்25

நடிகர் விஜயகாந் அரசியலில் குதிக்க முடிவுசெய்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பை அவர் நாளை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இன்று காலை அவர் கோவையில்

உலக அரங்கில்

இருந்து சென்னை திரும்புவதாக ரசி கர் மன்ற வட்டாரத்தில் தெரிவிக்கப் பட்டது. நாளை சனிக்கிழமை புதிய கட்சி தொடங்கும் முடிவை விஜய காந் அறிவிக்கிறார்.

புதிய கட்சிக்கு 'தமிழ்' என்ற வார்த்தையில் பெயர் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் விஜயகாந்த் ஆர்வமாக இருக்கிறார்.

தமிழ் கழகம், தமிழ் முன்னேற்றக் கழகம், தமிழ்திராவிடர் கழகம், தமிழ திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய பெயர்களை ஏற்கனவே, அவர் பரிசீ லித்து உள்ளார். அநேகமாக தமிழ் கழகம் என்ற புதிய கட்சிக்கு பெயர் சூட்டப்படலாம் என்று தெரிகின்றது.

ரசிகர் மன்றத்தின் கொடி தற் போது மேலே சிவப்பு, கீழே கறுப்பு நிறத்தில் உள்ளது. கொடியின் நடு வில் ஜோதி இருக்கிறது. இந்தக் கொடியைப் புதிய கட்சிக்கு பயன்ப டுத்த விஜயகாந்த் முடிவு செய்துள் ளார்.

ரசிகர் மன்ற அமைப்பு அப்படியே அரசியல் அமைப்பாக மாற்றப்படும் ரசி கர் மன்ற மாவட்டத் தலைவர்கள் கட்சியின் மாவட்டத் தலைவர்கள் ஆகிறார்கள். ரசிகர் மன்றத்தில் உள்ள பகுதி, ஒன்றியச் செயலாளர் கள் வட்ட செயலாளர்களுக்கும் அதே பதவி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம் 25 ஆம திகதி திருவண்ணாமலையில் ரசிகர் மன்ற மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டை பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

மாநாட்டில் கட்சியின் முக்கிய முடிவுகளை அறிவிக்கின்றார் விஜய காந்த். (8)

# தீவிரவாதம் பாகிஸ்தானை அழித்துவிடும் என்கிறார் கிளின்ரன்

நியூயோர்க்,ஜூன்25

பாகிஸ்தானில் தீவிரவாதம் தலை விரித்து ஆடுகிறது. அதைத் தடுக்க அதிபர் முஷாரப் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், அந்த நாடே அழிந்து விடும் என்று அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பில் கிளின்ரன் எழுதிய சுயசரி தைப் புத்தகம் கடந்த செவ்வாயன்று வெளியிடப்பட்டது. 'மை லைவ்' என்ற அந்தப் புத்தகத்தைப் பெற இவரது ரசிகர்கள் மிகுந்த ஆர்வமாக உள்ள னர். பல இடங்களில் நீண்டவரிசையில நின்று புத்தகத்தை வாங்கிச் செல் கின்றனர்.

பாகிஸ்தான் தொடர்பாக அவர் தனது புத்தகத்தில் கூறியிருப்பதாவது:-

கடந்த 1999 ஆம் ஆண்டு ஒக்ரோ பர் 12 ஆம் திகதி பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பி டம் இருந்து இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியவர் முஷாரப். அறிவுக்கூர்மையும், பலமும், வார்த்தை ஜாலமும் கொண்ட அவர், அமைதி



யான வளர்ச்சிப் பாதையைத் தேர்ந் தெடுத்தால் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பாகிஸ்தானில் தீவிரவாதம் பெரிய பிரச்சினையாக வுள்ளது. அதை எதிர்த்து முஷாரப் போராடவேண்டும். இல்லையெனில், அந்த தீவிரவாதம் பாகிஸ்தானையே அழித்துவிடும். இதை நான் முஷாரப் பிடமே தெரிவித்தேன் - என்று எழு தியுள்ளார். (8)

# மனவுறுதியுடன் உள்ளதாக மக்களுக்கு சதாம் கடிதம்



வாஷிங்ரன்,ஜூன்25

தான் மன உறுதியுடன் இருப்ப தாக ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் தனது மக்களுக்கு எழுதி யுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டார்.சிறையில் இருக்கும் சதாம் ஜோர்டானில் உள்ள தனது மூத்த மகளுக்கு கடிதம் எழுதியுள் ளார். சர்வதேச செஞ்சிலுவைக் கழகத்தின் உதவியுடன் இந்தக் கடி தம் கடுமையான தணிக்கை செய் யப்பட்டு மகளிடம் கடந்த பெப்ரவரி மாதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை சதாம் ஹுசை னின் சட்டத்தரணி அகமது அல் ருஷா தன் 'நியூஸ் வீக்' பத்திரிகைக்கு அளித்துள்ளார். அதில் 17வார்த்தை கள் மட்டுமே புரிந்துகொள்ளும் விதத்தில் உள்ளன. மற்றவை தணிக்கை செய்யப்பட்டுள்ளதால் புரிந்துகொள்ள இயலவில்லை, என் கிறார் ருஷாதன்.

இன்னும் மன உறுதியுடன் இருப்ப தாக அக்கடிதத்தில் சதாம் குறிப் பிட்டுள்ளார். மற்றவர்களின் நலனை யும் கேட்டதாகச் சொல்லவும், என இக்கடிதத்தில் சதாம் குறிப்பிட்டுள் ளார். 'நான் இன்னும் மன உறுதியு டன் இருப்பதற்கு கடவுளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'. என சதாம் தனது கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார். (8)

# தலைகீழாகக் கவிழ்ந்தது பஸ்; சுற்றுலாப் பயணிகள் 15 பேர் பலி!

ஆபிரிக்க நாடான மொராக்கோ வில் இருந்து சுற்றுலாப் பயணிகள் ஒரு சொகுசு பஸ்ஸில் பிரான்சு நாட் டுக்கு சுற்றுலா வந்தனர். பிரான்சின் தெற்குப் பகுதியில் உள்ள 'பாஸ் டியர்ஸ்' நகரில் அந்தச் சுற்றுலா பஸ் நுழைந்ததும் திடீரென்று நிலை தடு மாறியது. தாறுமாறாக ஓடிய பஸ் பள் ளத்தில் வீழ்ந்து தலைகீழாகக் கவிழ்ந்தது.

இந்த பஸ்ஸில் இருந்த சுற்றுலா கப் பயணிகளில் 15 பேர் உடல் நசுங்கி பலியாகினார்கள். 25 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்த னர். தலை குப்புறக் கிடக்கும் அந்த



பஸ்ஸில் இருந்து பயணிகளின் உடல்களை பிரான்சு நாட்டு பொலீ ஸார் மீட்கும் காட்சி. (8)

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

இழுவலை, நீள்வரிசைத் தூண்டில் வலை, செவுள் வலை போன்றவற்றில் ஆண்டொன்றுக்கு 20 மில்லியன் தொன்கள் உப பிடிபாடுகளாகச் சிக்குகின்றன. இதனால், கடலின் உயிர்வளத்தில் பாரிய சேதாரம் ஏற்படுகின்றது.

உ
சிவமயம்



# கோண்டாவில் வடக்கு
# சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய
# அலங்கார உற்சவ
# ஆனி உத்தர சங்காபிஷேகச் சிறப்புமலர் - 25.06.2004



## ஆதீன முதல்வரின் அருளாசியுரை



காவல் தெய்வமான வைரவப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பம் போக்கி இன்ப வாழ்வு அருளும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருக்கும் தலந்தான் கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் கோயில்.

விக்கினங்கள் தீர்க்கின்ற ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமானும் கலியுகவரதனாகிய ஸ்ரீ கந்தப் பெருமானும் பக்கத்தில் வீற்றிருக்க சாமுண்டாதேவி சமேதராக ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் இந்த ஆலயத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

துன்பங்கள், துயரங்கள் நீங்கவும் இன்னல்கள், இடுக்கண்கள் அகலவும் நம் எல்லோருக்கும் காவல் தெய்வமாயிருந்து காத்தருள்புரியும் ஞான வைரவப் பெருமானுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று இன்று ஆனி உத்தர நன்னாளில் சங்காபிஷேகம் நிகழ்வது நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

ஆகவே, அடியார்க்கு நல்லானாக விளங்கும் எம் பெருமான் எல்லோருக்கும் திருவருள் பாலிக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## அருட்கடலே சரணம்!



பல்லவி

*ஆயிரம் ஆயிரம் சங்கு எடுத்து அபிஷேகம்*
*ஆனி உத்தர நாளில் ஆனந்தமாய் நாம் புரிவோம்*

அநுபல்லவி


*தோயும் பக்தியால் குளித்த*
*தேவஞான பைரவனே*
*நீயே துணையன்றி வேறு*
*நீனிலத்தில் துணையுமுண்டோ?*
*(ஆயிரம் ஆயிரம்...)*

சரணம்

*செருக்கு நிறைந்த அயன்*
*சிரந்தனை நீ கொய்தாய்!*
*உருக்கி மனத்தை யெல்லாம்*
*உன்னடி சேரவைத்தாய்*
*பெருக்கும் கண்ணீர் சொரியப்*
*பெருமானே பாட வைத்தாய்*
*அருட்கடலே சரணம்*
*அருள் ஞானபைரவனே*
*(ஆயிரம் ஆயிரம்...)*

*அன்னை சிவகாமி நல்கும்*
*ஆசி வேண்டி ஆனிமாதம்*
*மின்னிடும் கேடகத்தில் வந்தே*
*மிளிரருள் ஆசி பெற்றாய்*
*உன்னிதய பாசத்தால்*
*உல்லாசியும் ஆனிமாதம்*
*நின்னினிய வாசல் வந்தாள்*
*நீனிலக் கோண்டாவிலூரில்.*
*(ஆயிரம் ஆயிரம்...)*

மகாவித்துவான்
**பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்.**



## வரமருளி வாழ்வளிக்கும் ஸ்ரீ ஞான வைரவப்பெருமான்

அருள்மலிந்து கலைமிளிரும் ஈழதேசத்திலே, யாழ். குடா நாட்டில், வடகோண்டாவில் பதியிலே சாமுண்டாதேவி சமேதராகக் கோயில்கொண்டெழுந்தருளி அருளாட்சி புரிந்துகொண்டிருக்கிறார் ஸ்ரீ ஞானவைரவப்பெருமான்.

சைவமும், தமிழும் அழகுறு கலைகளும் கோண்டாவில் எனும் கிராமத்தில் சிறப்புற்றோங்க வாகீஸ்வரியின் ஆசியுடன் எம்பெருமானின் கருணையுமே காரணம். இது மகிழ்வுக்குரிய விடயம்; எங்களது ஆலயம் நூற்றாண்டு கால பழைமை வாய்ந்தது.

இந்த ஆலயத்திற்கு மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் திருவூஞ்சல், கீர்த்தனைகளை எழுதியுள்ளார். இப்பாடல்களைத் தென்னிந்தியாவின் பிரபல பாடகர்கள் சீர்காழி கோவிந்தராஜன் சிவசிதம்பரமும், ரி.எம்.சௌந்தரராஜன் செல்வக்குமாரும் பாடியுள்ளனர்.

அலங்கார உற்சவத்தின் நிறைவுநாளான ஆனி உத்தரமாகிய இன்று (25.06.2004) வெள்ளிக்கிழமை எம்பெருமானுக்கு காலை 8.00 மணியளவில் நவோத்தர சகஸ்ர (1008) சங்காபிஷேகமும், விசேட பூசை நிகழ்வுகளும் இடம்பெறும். மாலைப் பூசை 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.00 மணியளவில் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கேடகத்தில் வைரவப்பெருமான் திருவீதிவலம் வரும் திருக்காட்சியும், இடம்பெறும். இன்றைய நன்னாளிலே அடியவர்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்து அருளாசியைப் பெற்றுச் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ வரமருளி வாழ்வளிக்கும் சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமானைப் போற்றித் துதிசெய்கின்றோம்.



தலைவர்
**ம.றமேஸ்குமார்**
ஆலய பரிபாலன சபை.



செயலாளர்
**ஜெ.சுபாஸ்கரன்.**

## கண்ணருள் செய்வாய்!



புண்ணிய வடகோண்டாவில்
பொலிந்திடும் ஆலின் நிழல்
வண்ணமார் கோயில் கொண்ட
வைரவப் பெருமானே, நின்
தண்ணடியார்கள் எல்லாம்
தருசுகம் செழித்து வாழ
கண்ணருள் செய்வாய் ஐயா
கழலினை போற்றி போற்றி.

அன்பர்க்குக் காட்சிகாட்டி
ஆலின் கீழ்க் கோயில் கொண்ட
பொன்பொலி சடையினானே
புண்ணியர் பூசைசெய்யத்
துன்பங்கள் நீக்கிக் காக்கும்
சூலநாயகனே, நின்றன்
இன்பமார் கருணை நல்கி
எங்களைக் காப்பாய் போற்றி!

கலாநிதி அளவையூர்
**அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A.**

### கோண்டாவில் வடக்கு
### சாமுண்டாதேவி சமேத ஸ்ரீஞானவைரவர் ஆலயம்
### 26.06.2004 சனிக்கிழமை
### பூங்காவன உற்சவ நிகழ்வின்
## நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. தேவாரம்
3. ஆசியுரை
4. தலைமையுரை
5. கௌரவிப்பு நிகழ்வு
6. ஏற்புரை
7. பரிசளிப்பு
8. ஈழத்தின் முன்னணி இசைக் குழுவான

ஐங்கரன் இசைக்குழுவுடன் இணைந்து
ஈழத்தேசத்தின் பிரபலபாடகர்
என்.ரகுநாதன் இணைந்து வழங்கும்

### இன்னிசைக் கச்சேரி



பீஸ்மன்
ஐங்கரன் இசைக்குழு



ரகுநாதன்

**- விழாக்குழு -**

## விழா சிறப்புற வாழ்த்துவோர்

**நியூ லக்ஷி தையலகம்**
பலாலி வீதி,
டிப்போ அருகில்
கோண்டாவில்.

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
கிளை:
**தில்லையம்பதி கொமினிக்கேசன்**
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் சந்தி.

**முத்து பிறின்டேர்ஸ்**
38 1/1 (மேல்மாடி),
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

**மனோ அம்பிஸ் ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய்.

**செல்வம் மரக்காலை**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**சூர்யா வர்ணப்பூச்சு**
ஸ்ரீவாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
*உரிமையாளர்:* சந்திரன்

**குட்லக் தையலகம்**
பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி.

**லிங்கன் செறமிக்ஸ்**
இல. 2-½,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**மதுரா நகை மாடம்**
இல. 59, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

(33426) (24-12-11)

**மயில் டிஜிற்றல் போட்டோ**
வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு.

**சசி வீடியோ அன் ஓடியோ**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**சுந்தர்சன்**
எலக்ரோனிக் வகை.
பி.வி.சி. பைப் வகை
விநியோகித்தல். பொருத்துதல்
(மத்திய சந்தை முன்பாக)
மானிப்பாய்.

**மங்களா தளபாட நிலையம்**
இல. 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சுவிஸ் விருந்தகம்**
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**கஜி - கபேசி**
**தச்சுத் தொழிற்சாலை**
*உரிமையாளர்:* ஜீவரத்தினம்
ஸ்ரீவாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு.

**ஹரிகா தையலகம்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**ஜெனன் பனை மரக்காலை**
வீரமாகாளி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீசண்முகா தச்சு தொழிற்சாலை**
17A, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை.

**சதீஸ் புத்தகசாலை**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**ஜோய் நகைமாளிகை**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**ஏரி சுடர் விற்பனை நிலையம்**
கட்டடங்களுக்கான
மின்னிணைப்பு. வர்ணப்பூச்சு.
குழாய் பொருத்துதல்.
*உரிமையாளர்:* செ.சித்திவிநாயகமூர்த்தி
இல. 131, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 077 6184553

**த.இராசையா அன் சன்ஸ்**
23/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**தில்லையம்பதி லெதர் வேக்ஸ்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

# இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் தரும் ஆனி உத்தரம்

இன்று ஆனி உத்தர நன்னாள் இந்த நாள் சைவப் பெருமக்களால் விசேஷமாகக் கொண்டாடப்படும் மகிமை வாய்ந்தது.

இந்த நாளில்தான் இறைவன் சிவகாமி அம்பாள் சமேதரராகக் காட்சி கொடுத்து அன்பர்களையும் அடியார்களையும் உய்விக்கும் பொருட்டு திருநடனம் ஆடிய சிறப்பு கைவரப் பெற்றது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் இறைவனின் திருக்கோலத்தைக் காண இந்த ஆனி உத்தர நாளையே தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஈழத்துச் சிதம்பரம் என விளங்கும் காரைநகர் சிவன்கோயிலிலும் இந்த ஆனி உத்தரத் தரிசனத்தைக் காணலாம்

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலான ஐந்தொழில்களும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் எனும் மூர்த்திகளைக் கொண்டு இயற்றப்படுகின்றன.

"கோயில்" என்பதற்குச் சிறப்பாக எடுத்துக் கூறும் ஸ்தலம் சிதம்பரம். இந்தச் சிதம்பரத்திலேயே ஆனி மாத மஹோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுவது வழமை.

இந்த விழாவில் தீர்த்தோற்சவம் ஆனி உத்தரத்தன்று வரும். இந்த நாளில் தில்லை நடராஜனின் தரிசனத்துக்காக அடியார்கள் அதிகாலையிலேயே கூடிவிடுவார்கள்.



ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அடியார்களுக்கு அருட்காட்சி நல்குவதற்காக எம்பெருமான் ஆனந்த நடனஞ்செய்து வீதியுலா வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.


நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தைக் காண்பதற்காக பக்தர்கள் வெள்ளம் போல கூடி விடுவார்கள். ஜன சமுத்திரத்தின் நடுவே எம்பெருமான் நடனமாடி வருவார். இன்றைய ஆனி உத்தர நன்னாளில் அந்தத் தரிசனம் காண்பதற்கு பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும். அனுபவித்தவர்களுக்குத் தான் அந்த உண்மை புரியும்.

இந்நாளில் விரதமிருந்து சிவநாமவளிகளைப் பராயணஞ்செய்து சிவபெருமானைப் பூஜிப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் அடைவார்கள்.

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்பது போல இறைவன் ஆடுகின்றான். நாம் அவனுடைய ஆட்டத்தின் பேருட் கருணையினால் பூவுலகில் சதுர்வித புருஷார்த்தங்களை அனுபவிக்கின்றோம். எனவே, இந்தப் பூவுலகில் மானிடப் பிறவி எடுத்த நாம் இந்த ஆனி உத்தர தரிசனத்தைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

*குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல்*
*மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த*
*பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப்பிறவியும் வேண்டுவதே*
*இம்மாநிலத்தே.*

-கலாஸ்ரீ-



யாழ். வண்ணை கன்னாதிட்டி ஸ்ரீ காளி அம்பாள் ஆலய தேர் முட்டி கட்டுவதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (10)

## திருவாசகம் என்னும் பெரும் தேனை அள்ளித்தந்த மணிவாசகப் பெருமான்!

சமயக் குரவர்களின் வரிசையிலே நான்காவது இடத்தில் வைத்து இந்துக்களால் போற்றப்படுபவர் மாணிக்கவாசகப் பெருமான். திருமுறைகளிலே இவரது திருமுறை 7ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

திருவாசகம் என்னும் அருந்தேனை நமக்கு அள்ளித் தந்த மணிவாசகப் பெருமான் தெய்வப்பற்றோடு நாட்டுப் பற்றும் கொண்டவராக விளங்கினார். 'பக்தி செய்யும் அடியவரைப் பரம் பரந்துள் உய்க்கும் பரம்பொருளானவன் பாண்டி நாட்டையே பழம்பதியாகக் கொண்டவன்'. தான் பிறந்து வளர்ந்த பாண்டிநாட்டை இறைவனுக்கே உரியது ஆக்குகின்றார்.

மாணிக்கவாசகர் பாண்டிநாட்டைச் சேர்ந்த ஆமாத்திய பிராமண வகுப்பிலே பிறந்து, பாண்டி மன்னனின் அமைச்சரவையில் நல்லதோர் அமைச்சராக இருந்தவர். அரசன் குதிரைகளை வாங்கிவர அமைச்சரிடம் பொருள் கொடுத்து, அவரைச் சோழ நாட்டு கடற்கரைப் பிரதேசத்திற்கு அனுப்பினார். குதிரை வாங்கச் செல்லும் வழியில் மணிவாசகர், சோழநாட்டின் எல்லைப் பிரதேசத்திலுள்ள திருப்பெருந்துறை என்னும் கிராமத்தில் கோயில்கட்டினார். இச்செயல், பாண்டி மன்னனுக்கு சினத்தைக் கொடுத்தது. மணிவாசகர் அரச பொருளைக் கொண்டு கோயில் கட்டியது குற்றமல்ல. அரசர்தான் அக்காலத்தில் கோயில் எழுப்பினராதலால் மந்திரி கோயில் எழுப்பியதும் குற்றமல்ல. ஆனால், மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தில் கோயில் எழுப்பியதே குற்றம். அதற்காகத்தான் மன்னன் மணிவாசகரைத் தண்டித்தான்.

மணிவாசகர் மண்ணுக்கும் பொன்னுக்கும் வேற்றுமை அறியாத புண்ணியர். அக்காலத்தில் கோயிலை மையமாக வைத்துத்தான் அக்கால மக்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியும் இதனாற்றான் பிறந்தது. இவர் திருப் பெருந்துறையில் கோயில் கட்டியது மட்டுமல்லாமல் அங்கு மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். இது அவர் சமூகம்மீது கொண்டபற்றை எடுத்துக்காட்டுகிறது. மணிவாசகரைத் தண்டித்த மன்னரும் தவறையுணர்ந்து மணிவாசகரிடம் மன்னிப்புக்கேட்டான்; மாணிவாசகரும் தன்னுடைய மந்திரிப் பதவியைத் துறந்தார் என அவரது வரலாறு நீடே செல்கிறது.

அவர் பதவி துறந்ததனால் நமக்குத் திருவாசகம் எனும் அரும்பெருந் தேன் கிடைத்தது. திருவாசகம தமிழ மொழிக்கே உரித்தான ஒரு சிறப்புமிகு பேரிலக்கியமாகும். இதனாற்றான் 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்ற பழமொழி பிறந்திற்று. 'தோத்திரத்திற் சிறந்தது திருவாசகம்' என்பது வள்ளலார் வாக்கு.

பைபிளைச் சுமந்துவந்து இங்குள்ள மக்களையெல்லாம் பைபிள் பக்தர்களாக்கும் பணியிலீடுபட்ட பீ.யூ.போப் என்னும் பிரிட்டிஷ் பாதிரியார், திருவாசகத்தைப் படித்து மனமுருகி, திருவாசகப் பக்தராகவே மாறி, அந்த சைவ சமய ஒப்பற்ற இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கே வழங்கினார்.

திருவாசக ஆசிரியரை "வான கலந்த மாணிக்கவாசக!" என்று அழைக்கிறார் வடலூரார். வான் கலந்த என்பதற்கு முத்திபெற என்னும் பொருளும் உண்டு. ஆனால், வள்ளலார் அப்படிச் சொல்லவில்லை. நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐம்பூத ஸ்தலங்களிலே வானத் திற்குத் தில்லையம்பதியைச் சொல்வதுண்டு. அந்த தில்லை யம் பதியிலே முத்தி பெற்ற வராதலினால் "வான் கலந்த மாணிக்கவாசக" என்றார் வள்ளலார்.

திருவாசகத்தைப் பாடினால் அது ஊனிலே கலக்கும்; உயிரிலே கலக்கும். நறகருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங் கனித் தீஞ்சுவை கலந்து உண்டாற் போல் உடம்பெல்லாம் இனிக்கும் என்கிறார் இராமலிங்கனார். இந்த அனுபவத்தைத் தாமே பெற்றுணர்ந்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

**தெல்லியூர் சி.ஹரிகரன்**

"வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்தென் ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று குறிப்பிடுகிறார்.

குரு வழிபாட்டின் சிறப்பினைப் பற்றியும் - அதன்மூலம் தான் பெற்ற பெரும் பாக்கியம் பற்றியும் - குறிப்பிட்ட மணிவாசகப் பெருமான், குருந்த மர நிழலிலே இறைவன் தன்னைக் குருவடிவாகவே வந்து ஆட்கொண்டான் என்பதைக் "கோகழி ஆண்ட குருமணிதன்தாள் வாழ்க" என்று குறிப்பிடுகிறார். குருவை இறைவனாகக் கண்டு முத்திபெற்று ஞான வழி நின்று சாயுட்சிய முத்திபெற்றார். ★

# தியானத்தால் உயர்ந்த அற்புத மனிதர் விண்வெளி ஆய்வாளர் ஆர்ற் ஓங் ஜூம்சாய்

பாங்கொக் சத்தியசாயி பல்கலைக் கழகத்தின் தலைவர் கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாய் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். மானிப்பாய் ஸ்ரீசத்திய சாயி வித்தியாசாலையின் இரண்டாவது விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வருகைதரும் இவர் பற்றிய குறிப்பு ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

இன்று யாழ்ப்பாணம் வருகை தரும் கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாய் ஓர் அற்புதமான மனிதர். அபூர்வமாகக் காணக்கூடியவரும் கூட. பத்து வருடங்கள் அமெரிக்காவில் நாசா (NASA NATIONAL AERONAVTICS) என்கின்ற அதியுயர் விண்வெளி ஆய்வு நிலையத்தில் ஆய்வாளராக இருந்து 1994ஆம் ஆண்டு வருடம் அந்த ஆண்டுக்கான மிகவும் சிறந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கான பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

அமெரிக்காவில் தனது விண்வெளி ஆய்வினாலும் சரி, லண்டனில் தனது கலாநிதிப் பட்டத்திற்கான பொறியியல் ஆய்வானாலும் சரி, தனக்கு உறுதுணையாக இருந்தது, தான் மிகவும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் தியானப் பயிற்சிதான் என்று அவர் கூறுவார்.

### தியானத்தின் பெருமை

தியானம் மனிதனின் மனத்தை அதியுயர் அறிவு நிலைக்கு உயர்த்திச் செல்கின்றது. அப்போது புலரும் ஓர் உள்ளுண ர்வால் அபூர்வமான விஞ்ஞான உண்மைகளின் தடயங்கள் தமக்குக் கிடைத்ததாக பல விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இந்தக் கருத்தையே ஜூம்சாய் பல முறை தெரிவித்திருக்கின்றார். விஞ்ஞானிகள் மட்டுமல்ல, காவியங்கள் படைத்த கவிஞர்களும், அமரத்துவம் பெற்ற சித்திரங்களையும் சிற்பங்களை உருவாக்கிய கலைஞர்களும் சங்கீத மகா வித்துவான்களும் அதியுயர் மனநிலையிலேயே சஞ்சரித்திருக்கிறார்கள்.

மனத்தின் உன்னத நிலையை எல்லோராலும் அடையமுடியும். அதற்கு வாழ்க்கை முறையில் ஒழுக்கமும், மனப்பக்குவமும் அவசியமாகும். இதனைக் கல்வியினூடாகப் பயிற்றுவதையே தனது வாழ்வின் கர்மமாக ஜூம்சாய் ஏற்றுக்கொண்டுள்ளார்.

### வாழ்க்கையின் உன்னதம் காண உதவும் பாபாவின் கோட்பாடுகள்

கல்வியின் நோக்கம் ஒழுக்கம். ஒழுக்கத்தின் ஆணிவேர் அன்பு. அன்பின் அறுவடையான சத்தியமும் தர்மமும், சாந்தியும், அகிம்சையும் மனிதனுள் இருக்கும் தெய்வீகத்தை மலரச் செய்வதன்மூலம் வாழ்க்கையில் உன்னதம் காணலாம் என்ற ஸ்ரீசத்தியசாயி பாபாவின் கோட்பாடுகளை உலகளாவிய நிலையில் செயற்படச் செய்பவர் ஆர்ற் ஓங் ஜூம்சாய்.

அவர் தற்போது பாங்கொக்கிலுள்ள ஸ்ரீசத்தியசாயி பல்கலைக் கழகத்தின் தலைவர் ஆவார். ஸ்ரீ சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் உலகளாவிய செயற்முறைகளுக்கு ஆய்வுகள் மூலமும் நூல்கள் மூலம் டிப்ளோமா தரத்தில் ஆசிரிய பயிற்சிகள் மூலம் வழிகாட்டுவது இந்தப் பல்கலைக்கழகம் ஆகும். அந்த ஆக்கத்தில் உலவில் சம்பியா, நேபாளம் போன்ற நாடுகளில் மனித மேம்பாடுகளுக்கு முக்கியம் கொடுக்கும் ஸ்ரீசத்தியசாயி பாடசாலைகள் தோன்றியுள்ளன. இலங்கையில் உள்ள ஒரேயொரு ஸ்ரீசத்தியசாயி பாடசாலை மானிப்பாயில் இருப்பது நமது பாக்கியமாகும்.

விண்வெளி விஞ்ஞானத்திற்கும் மனித உன்னத மேம்பாட்டுக் கல்விக்குமிடையே கலாநிதி ஜூம்சாய் மூன்று தடவை தாய்லாந்தின் நாடாளுமன்றத்திற்கு பாங்கொக் நகரின் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அத்துடன், விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் சக்தி அமைச்சராகக் கடமையாற்றியவர். பொதுச் சுகாதார அமைச்சுக்கு ஆலோசகராக இருந்தவர். பாங்கொக்கில் சூளாலொங்கொம் பல்கலைக்கழகத்தில் மின்சார இயந்திரவியல் பேராசிரியராகவும், மாணவர் நலன்களின் பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியவர்.

**ஞானக்கதிர்**

### ஆத்மீகத்தைப் பேண பல வழியில் உதவியவர்

ஆம், ஆத்மீகமும் அதன் வழி ஒழுக்கத்தை நாடாளுமன்றத்திலும் பல்கலைக்கழகத்திலும் விஞ்ஞான ஆய்வுகூடங்களிலும் பயிலவும் நிலவவும் முடியும் என்று நடை முறையில் காட்டியவர் கலாநிதி ஜூம்சாய்.

பிறப்பிலும் அவருக்குச் சிறப்பு உண்டு. அவர் தாய்லாந்தின் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். அரசர் ராமா III இன் நேர் வாரிசு. அவரது பூட்டன் இலங்கை வந்து துறவு பூண்டு THA PRINCE ABBOT என்ற நாமத்துடன் கொழும்புக்கு அண்மையில் ஒரு புத்த விகாரையில் பிரதான விகாராதிபதியாகப் பணியாற்றினார். ஆகவே, ஜூம்சாயிக்கு நமது நாட்டின் தொடர்பும் உண்டு.

ஜூம்சாயக்கு தாய்லாந்து அரசு அதியுயர் அரச பட்டங்களைக் கொடுத்துள்ளது. அதில் ஒன்று 'சேர்' என்ற பட்டத்திற்குச் சமானமாகும். ஆனால், இவற்றிக்கு எல்லாம் மேலாக அன்பு, அடக்கம், வசீகரமுள்ள ஒழுக்கம், நிறைவான பேச்சில் இனிமை இப்படியான உருவங்கள் கொண்ட ஒருவராகவே நாம் இப்போது கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாயைச் சந்திக்கின்றோம். 68 வயதான ஜூம்சாய் பார்ப்பதற்கு இளைஞர். ஆனால், அந்த அழகிலே ஓர் ஆத்மீக முதுமையை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

அவரது நூலான 'ஐந்து மனித மேம்பாடுகளும் மனித உன்னதமும்' என்ற நூல் மிகவும் பிரசித்தமானது. பகவான் தரும் சத்தியம், தர்மம், பிரேமை, சாந்தி, அகிம்சை என்ற கோட்பாடுகளுக்குப் பகவானின் கருத்துக்களை அது விளங்குவதாகும். அந்த நூலும் அவருடன் விரிவுரையாளராக இருக்கும் (தற்போது அவருடன் வருகைதரும்) ஆங்கிலச் சகோதரி லொரேய்ன் ப(B) ரோஸ் எழுதிய DISCOVERING THE HEATR OF TEACHING என்ற நூலும் மனித மேம்பாட்டுக் கல்விப் போதனைக்கு உறுதுணையாக உள்ளன.



அவற்றின் அடிப்படையில் நாம் இதுவரை எமது பாடசாலைகளிலுள்ள சுமார் ஆயிரம் ஆசிரியர்களுக்குத் தமிழில் மனித மேம்பாட்டுக் கல்வியை வழங்கியுள்ளோம்.

மானிப்பாய் ஸ்ரீசத்திய சாயி பாடசாலையின் இரண்டாவது விளையாட்டுப் போட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாய் நாளை சனிக்கிழமை (26.06.2004) காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் நூலகக் கேட்போர் கூடத்தில் 'மனித மேம்பாட்டுக் கல்வி' என்ற பொருளில் பேசுகிறார். அந்தப் பொருளை அனைவரும் பெறவேண்டும். *

பேராசிரியர் **செ.சிவஞானசுந்தரம்**
*(நந்தி)*
ஸ்ரீசத்தியசாயி
மனித மேம்பாட்டுக் கல்வியின்
தேசிய அமைப்பாளர்

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரி; புனரமைப்புக்கு ரூபா 25 லட்சம்

யாழ்ப்பாணம்,ஜுன்25

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் புனரமைப்பு வேலைகளுக்கென தொழில் கல்வி அமைச்சினால் 25லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் என். யோகராஜன் தெரிவித்துள்ளார்

கடந்த 3ஆம் திகதி தொழில்நுட்பக் கல்வி அமைச்சர் பி.எஸ்.சேனகமகேவை கல்லூரி அதிபர் சந்தித்த போதே இந்த நிதிக்கான அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில இடவசதியின்மை, தளபாட வசதிகளின்மை, கற்றல் உபகரணங்கள் இல்லாமையால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குதல் போன்றன குறித்து அமைச்சரிடம் அதிபர் எடுத்துக் கூறினார் எனவும், அதனையடுத்து அமைச்சர் இந்நிதியினை ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கினார் - எனவும் கூறப்பட்டது.

இதற்கான பொறியியலாளர் குழுவொன்றினை நியமித்து தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டட நிர்மாண வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

புனரமைப்பு வேலைகள் அடுத்த வார முற்பகுதியில் ஆரம்பமாகுமென அவர் தெரிவித்தார். (9-13)

## மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

அல்வாய் கிழக்கு, மாலைசந்தை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற துவிதள விமானத்துக்கும் விநாயகர் மூஷிகம், பலிபீடம், சண்டேஸ்வரர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகப் பெரு விழா நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

காலம்: ஆனிமாதம் 11 ஆம் நாள் (25.06.2004) வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 10 மணிமுதல் 10.50 மணி வரையுள்ள சுபவேளையில்

மண்டலாபிஷேகம்.

26.06.2004 சனிக்கிழமை முதல் 05.07.2004 திங்கள் வரை நடைபெறும் (சங்காபிஷேகம்).

07.07.2004 கொடியேற்றம்

15.07.2004 தேர்த்திருவிழா

16.07.2004 தீர்த்தோற்சவம் (ஆடிப்பிறப்பு)

அடியார்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்து அருள்பெறுவீர்களாக.

பரிபாலனசபை

அல்வாய், மாலைசந்தை

ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்.

(சி-35788)(34-18-19)

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 - 03 - 1927



உதிர்வு 08 - 07 - 2003

### அமரர் முத்தன் சரவணை

திதி: பூர்வபக்க தசமி

பாசமுடன் எமை வளர்த்த நேசமிகு தந்தையே!
நீங்கள் ஈசனுடைய தாள் சேர்ந்து ஆனதுவோ ஓராண்டு?
வேண்டுகின்றோம் ஆண்டவனை
உங்கள் ஆத்மா சாந்திபெற!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (33434)(18-19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 04 - 03 - 1944



உதிர்வு 26 - 05 - 2004

### திருமதி சிவநேசன் சரோஜினிதேவி

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும் இன்று (25.06.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந் நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். (33359)(34-18-19)

## யாழ். மண்ணில் மாபெரும் கண்டிய நடனம்



இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ் வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித் தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது.

இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக,

01) மங்கள வாத்தியத்துடன் நடனம்
02) பூஜா நடனம்
03) மயில் நடனம்
04) உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05) முகமூடி நடனம்
06) யக்கம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07) கஜகாவன்ன நடனம்
08) ரபான் நடனம்
09) கோலாட்டம்
10) தமிழ் நடனப் பாடலுக்கு அபிநயம்
11) பந்தேரு நடனம்
12) பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13) கிராமத்து நடனம்
14) செம்பு நடனம்

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம்: 2004-06-27 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பி.ப. 1.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதிக்கு முந்துங்கள்: **T.K. ரூறிஸ்ற் இன்**

இல. 200, அரசடி வீதி,
பலாலி வீதி அருகில், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 5680 / 0776209963.

(சி-35735) (26-19-18)

*மொறட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும்*

## தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும் கணனியியல் கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த படிமுறை நகர்வைப் பற்றிய தெளிவின்மையை மாணவர் மத்தியில் நீக்கும்முகமாக , மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி முழுநாள் நிகழ்வை முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில்:-

- ★ குழுநிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் (Career Guidence- Group Level)
- ★ குழுநிலை கணனியியல் கருத்தரங்கு (Group discussion of Computing)
- ★ ஆற்றல் மேம்படுத்துகை விவாதம் (Skill Development Programme)

என்பன உள்ளடங்கும்.

நடைபெறும் பகுதிகள்:

| யாழ்ப்பாணம் | வலிகாமம் |
|---|---|
| இடம் : யாழ். மத்திய கல்லூரி | இடம் : இராமநாதன் கல்லூரி |
| காலம் : 25.06.2004 வெள்ளிக்கிழமை | காலம் : 26.06.2004 சனிக்கிழமை |
| நேரம் : காலை 8.30 மணி | நேரம் : காலை 8.30 மணி |
| பிரவேசம் : இலவசம் | பிரவேசம் : இலவசம் |

குறிப்பு:- பாடசாலை மாணவப் பிரதிநிதிகளுக்கான அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

*இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.*

தமிழ் இலக்கிய மன்றம்
மொறட்டுவை பல்கலைக்கழகம்

மொறட்டுவை பல்கலைக்கழக
மாணவர்கள்.

ஊடக அனுசரணை :- உதயன்

(C/35733)

# வாய்க்கால்களில் மணல் ஏற்றப்படுவதால் குளத்துக்குள் கடல்நீர் புகுந்துவிடும் அபாயம்

## தடுத்து நிறுத்துமாறு வேரவில் கமக்காரர் அமைப்புக் கோரிக்கை

வேரவில்,ஜூன்25

வேரவில் வயல்களிலிருந்து கடலுக்கு நீர்பாயும் பெருவாய்க்கால்களின இருபுறமும் மணல் ஏற்றப்படுவதால் கடல் நீர் குளத்துக்குள் புகுந்துவிடக கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது.

இதனால், மேற்படி பகுதியில் மணல் ஏற்றுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேரவில் கமக்கார அமைப்பு முழங்காவில் கமநல கேந்திர நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

எமது வேரவில் வயலில் இருந்து கடலில் நீர்பாயும் வாய்க்காலில் மாரிப் பிரிந்தான் எனப்படும் பகுதியில் உள்ள இரண்டு வாய்க்கால்களிலும், அதன் இரு பக்கங்களிலும் பெருமளவில் மணல் தொடர்ந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

மணல் ஏற்றுவதற்குரிய அனுமதி பூநகரிப் பிரதேச சபையினால் வழங்கபடுவதுடன் பணமும் பெறப்படுகின்றது. பற்றுச்சீட்டிலும் வேரவில் என்று குறிப்பிடப்படுகின்றது.

பிரதேச சபையில் அனுமதிபெற்று பலரும் மணல் ஏற்றுகின்றனர். பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமும் மணல் ஏற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் மணல் ஏற்றுபவர்கள் வாய்க்காலில் குறுக்கே அணைபோட்டு நீர்பாயாதவாறு தடை செய்துள்ளனர். குறித்த மாரிப் பிரிந்தான் பகுதியிலிருந்து பிரியும் இரண்டு வாய்க்கால்களும் ஆழமாகவும் சுமார் 50 அடி அகலமாகவும் வெட்டப்படுகின்றது.

தற்போது மணல் ஏற்றப்படுமிடத்திற்கு அண்மையாகக் கடல்நீர் மாரி காலத்தில் வருவதுண்டு. எனவே, மேட்டுப் பகுதியில் மணல் வெட்டி அள்ளப்படுவதால் கடல்நீர் எமது குளத்திற்கு வர வாய்ப்புள்ளது.

எனவே, எமது வாய்க்கால் அழிகக்கப்பட்டமைக்கானதும், இதுவரை எமது அனுமதியின்றி மணல் ஏற்றியமைக்காகிய நடவடிக்கைகளை எடுத்து மணல் ஏற்றுவதைத் தடைசெய்வதுடன், இதுவரையில் மணல் அள்ளப்பட்டதால ஏற்பட்ட சேதத்திற்காகிய பெறுமதியையும் பெற்றுத்தந்துதவுமாறு பணிவாக வேண்டுகிறோம். (-4)

## வீதியில் கண்டெடுத்த பணத்தை உரியவரிடம் சேர்ப்பித்த மாணவி

### நேர்மையைப் பலரும் பாராட்டினர்

வடடககசசி,ஜூன25

வீதியில் கண்டெடுத்த 11 ஆயிரத்து 900 ரூபா பணத்தை உரியவரிடம் ஒப்படைத்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார் தரம் 9 இல் கற்கும் மாணவியொருவர்.

வட்டக்கச்சி இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் சா.கிருசிகா என்ற மாணவியே இந்தப் பாராட்டுக்குரியவர்.

சமீபத்தில் வட்டக்கச்சி மாயவனூரைச் சேர்ந்த நபர் நகையை அடைவுவைத்துப் பணத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்த வேளை வீதியில் அதனைத் தவற விட்டார்.

குறிப்பிட்ட மாணவி ரியூசன் சென்ற வேளை வீதியில் கிடந்த கைப்பையைக் கண்டெடுத்துள்ளார். அதற்குள் பெருந்தொகைப்பணம் கிடந்ததைப் பார்த்ததும் அதனை வட்டக்கச்சி காவல்துறைப் பணிமனையில ஒப்படைத்தார்.

காவல் பணிமனையினரின் நடவடிக்கையால் பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தவறவிட்ட பணம் உரியவருக்கு மீளக்கிடைக்க சமயோசிதமாகவும் நேர்மையாகவும் செயற்பட்ட அந்த மாணவியைக் கடந்த 18 ஆம் திகதி பாடசாலையில் வைத்து, பணம் தொலைத்த நபரும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும் பாராட்டிக் கௌரவித்தனர். (4-ரி)

## நடமாடும் சேவை நடக்கவே இல்லை!

கிளிநொச்சி,ஜூன்25

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு 'சாரதி அனுமதிப்பத்திரம்' வழங்குவதற்கான நடமாடும் சேவை கடந்த இரண்டாம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதுவரை அத்தகைய நடமாடும் சேவைகள் எதுவும் நடக்கவேயில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி நடமாடும சேவையில் பங்குகொண்டு பயன்பெற விரும்பும் மோட்டார் சைக்கிள் சாரதிகளின் விவரங்கள் ஏற்கனவே அரச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தன.

பதிவினை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட சாரதிகள் அதற்கான கட்டணத்தையும் செலுத்தியிருந்தனர்.

தமமிடம் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் நடமாடும சேவை இதுவரை நடத்தப்படாததையிட்டு சாரதிகள் கடும் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் தாம் மோட்டார் சைக்கிளுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இதேவேளை - கடவுச்சீட்டு (பாஸ்போட்) வழங்குவதற்கான நடமாடும் சேவையொன்று விரைவில் நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்திருக்கிறார்.

இந்த நடமாடும் சேவை மூலம் கடவுச்சீட்டு பெறவிரும்புவோர் தத்தம பகுதிப பிரதேச செயலர் பிரிவுகளில் பதிவு செய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (4-173-301)

## விளையாட்டு நிகழ்வுகள்

பரந்தன்,ஜூன்25

விசுவமடு மேற்கு, நாச்சிக்குடா 'இளந்தென்றல்' விளையாட்டுக்கழக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுத் திறனாய்வு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

நாச்சிக்குடா கிராம தேசிய எழுச்சிப் பேரவைத்தலைவர் குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர், விசுவமடு கிழக்கு - மேற்கு கிராம அரசியல் துறைப் பொறுப்பாளர் புவியழகன், முனபள்ளி இணைப்பாளர் அனுசியா உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-ரி-352)

★ ★ ★

விசுவமடு பாரதிபுரம் 'செந்தாமரை' முன்பள்ளியின் வருடாந்தத் திறனாயவுப் போட்டி கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

சமூக, பொருளாதார, அபிவிருத்தி நிறுவனத் தலைவர் கி.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாரதிபுரம் ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கா.ஜெயம், விசுவமடு முன்பள்ளி மேற்பார்வையாளர் அ.லகசன், சமூக நலன் உணர்வூட்டல் இணைப்பாளர் மு.அனுசா, உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-ரி-352)

★ ★ ★

பரந்தன்,ஜூன்25

தருமபுரம் 'ஈழகாந்தன்' முன்பள்ளி விளையாட்டுவிழா கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

தருமபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செபஸ்ராசா தலைமையில தருமபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இவ்விளையாட்டு விழாவில் 'கே.என்.டி.ஓ' பணிப்பாளர் அதிகமான் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-ரி-352)

★ ★ ★

பரந்தன்,ஜூன்25

கண்டாவளை, புளியம்பொக்கணை 'கனோஜி' முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

ஆசிரியர் த.சிவரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புளியம்பொக்கணை நாகேஸ்வரா வித்தியாலய முதல்வர் சேரவிக்குமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-ரி-352)

★ ★ ★

ஒட்டுசுட்டான்.ஜூன்25

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும், பொருண்மிய மதியுரையகமும் இணைந்து நடத்திவரும் சம்மளங்குளம் பாரதி முன்பள்ளியினதும், ஒட்டுசுட்டான நாவலர் முன்பள்ளியினதும் விளையாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் சிவன் கோயில் முன்றிலில் இடம்பெற்றது.

பொருண்மிய மதியுரையக திட்ட மேற்பார்வையாளர் இ.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவல் ஒட்டுசுட்டான் ம.வி முதல்வர் பங்கயற்செல்வன் ஆசியுரை வழங்கினார். (4-ரி.351)

### காற்றினால் சேதம்

ஒட்டுசுட்டான்,ஜூன்24

கடந்த சில நா[illegible]க வீசிவரும கடுங்காற்றினால் [illegible]யின் பல பிரதேசங்களில் பயன்தரு மரங்கள் முறிந் தும், குடிசைகளின் ஓலைகள், தகரங் கள் தூக்கிவீசப்பட்டும் சேதஙகள் ஏற் பட்டு வருகின்றன.

இவ்வருடம் மாமரங்கள் அதிகமாகக் காய்த்துள்ள போதிலும் இக்காற்றினால் நிலத்திலே காய்கள் யாவும் வீழ்ந்து கிடக்கின்றன. (4-351-ரி)



'பாடசாலைகளை வளம்படுத்துவோம்' திட்டத்தைப் பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் சிவசொரூபநாதபிள்ளை தென்னங்கன்றினை நட்டு ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.
*(படம்:ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# வன்னிச் செய்திகள்

## மரநிழலில் கல்வி கற்கும் கற்சிலைமடு மாணவர்கள்

ஒட்டுசுட்டான்,ஜூன்25

ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் கட்டட வசதிகள் இலலாமையாலும் ஆசிரியர் பற்றாக்குறையினாலும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் 600 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற இப்பாடசாலையில மேலும் மாணவர்கள் சேர்க்கப்படுவதனால் இடப்பற்றாக்குறை காரணமாகப் பல வகுப்புக்கள் மரங்களின் கீழேயே நடத்தப்பட்டு வருகின்றன. வகுப்புக்களை நடத்துவதற்காகத் தறகாலிகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள் பலத்த காற்று மற்றும் மழை நேரங்களில் சேதமடைவதால் அங்கிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுககான ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதனாலும் மற்றும் ஆசிரியர் தங்கும் விடுதி இல்லாமையினாலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுககுப் பெரிதும் பாதிப்பு ஏற்படடுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி-351)

## அஞ்சலகம் நோக்கி ஆறு கிலோமீற்றர்!

கிளிநொச்சி,ஜூன்25

கடந்த சில வருடங்களாக ஒட்டுசுட்டான் அஞ்சலகம் ஒட்டுசுட்டானில் 14 ஆவது கல் மைல் தொலைவில் ஒதுக்குப்புறமான பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.

இதனால், பெருமளவு மக்கள் தபால் சேவையினைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

கற்சிலைமடு, கூழாமுறிப்பு, கருவேலன்கண்டல், சம்பாங்குளம், பண்டாரவன்னி, பேராறு கெருடமடு, வசந்தபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் 6 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்துக்குச் சென்றே அஞ்சலகத்தை அடையவேண்டியிருக்கிறது.

இப்பகுதிகளில் பஸ்சேவையும் சீரில்லாததால் மக்கள் அஞ்சலகம் நோக்கி ஆறுகிலோமீற்றர் தூரத்திற்கு நடந்துசெல்ல வேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது. இந்த அஞ்சலகத்தை கிராமங்களுக்கு மத்தியில் - முன்னா இருந்த இடத்திற்கு மீண்டும் இடம் மாற்றுமாறு பொதுமக்கள் கோரியிருக்கின்றனர். (-4-351)

## வீதிக் குறியீடுகளை இடுக!

முல்லைத்தீவு,ஜூன்25

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில வெட்டுவாய்க்கால் பாலத்துக்கு அண்மையாக பாடசாலை, கோயில் முன்பள்ளி என்பன அமைந்திருப்பதால் அப்பகுதியில் வீதிக் குறியீடுகளை இடுமாறு பொதுமக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பகுதியில் அண்மைக்காலமாக விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும் சுட்டிககாடடப்பட்டுள்ளது. (4-353)

## முல்லைத்தீவில் நாய் கடித்தால் ஏற்புத்தடை ஊசி வவுனியாவில்!

ஒட்டுசுட்டான்,ஜூன்25

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அனுபவித்து வரும் பல்வேறு இடர்களில் இதுவும் ஒன்று.

முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடிக்கான ஏற்புத்தடை ஊசி மருந்து (ஏ.ஆர்.வி.) இல்லை.

இதனால், முல்லை மாவட்டததில யாராவது விசர் நாயினால் கடியுண்டால ஏற்புத்தடை ஊசியைப் போடுவதற்கு அவர்கள் வவுனியா ஆஸ்பத்திக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருககிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் உரிய நடவடிக்கைகள் எடுக்கபடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. விசர்நாய்க்கடிக்கு இலக்கானோர் பெரும் சிரமங்களின் மத்தியில் முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்குச் சென்றுவருகின்றனர்.

இதேவேளை - ஒட்டுசுட்டான் முள்ளியவளைப் பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வீதியெங்கிலும் ஓடித்திரியும் இந்த நாய்கள் வீதியால் போவோர்,வருவோரைத் துரத்தித் துரத்திக் கடிக்கின்றன எனவும் - இவற்றில் விசர்நாய்கள் எவை, நோயற்ற நாய்கள் எவை என்று அடையாளப்படுத்தி அறிய முடியவில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (4-351-ரி)

## மண்ணிறமாய் மாறும் மாணவரின் சீருடைகள்!

### ஒட்டுசுட்டான் வீதியில் இந்த அவலம்

ஒட்டுசுட்டான்,ஜூன்25

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதிக்கு செம்மண் கிரவல் போடப்பட்டு நீண்ட நாள்களாகியும் தார் ஊற்றப்படவில்லை.

இதனால், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியினால் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களினால் எழுகின்ற புழுதி மூட்டங்களினால் இவ்வீதியூடாகச் செல்லும் பாடசாலை மாணவர்களின் சீருடைகள் நிறம் மாறி மண்ணிறமாகி விடுகின்றன.

இவ்வீதியில் ஓரமாக வர்த்தக நிலையங்களை வைத்திருப்போர் மறறும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுகுறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலதடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை பலனேதும் கிட்டவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்பட்டது. (4-ரி-351)

யாழ்ப்பாணம்

# இளைஞனுக்குப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்25

உரும்பிராய் மாணவி செல்வராசா துவாரகா (வயது 9) என்பவரின் மர்ம மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவரான தில்லையம்பலம் ரமணனை பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சிறுமி துவாரகாவின் சடலம் பாடசாலைக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டமை தொடர்பாக மேற்படி இளைஞர் கைதாகியிருந்தார்.

இவரைப் பிணையில் விடுவிக்குமாறுகோரி அவரது தாயாரான தில்லையம்பலம் சரோஜினிதேவி சட்டத்தரணி எஸ்.ஏ.ஏகநாதன் மூலம் பிணை மனுவை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இந்த மனு குறித்த விசாரணை நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் இடம்பெற்றது.

அப்போது சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என் ஸ்ரீகாந்தா,

சந்தேகநபர் 5 மாதங்கள் மற்றும் நான்கரை மாதங்கள் என இரு காலப் பகுதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்றும் -

ஆகவே, அவரைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்றும் - வாதிட்டார்.

இதனையடுத்து சந்தேகநபரை, 15 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபாவுக்கு இரு ஆள் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

அத்துடன், மாத இறுதியில் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் அவரைக் கையெழுத்திடுமாறும் நீதிமன்றம் பணித்தது. (ஒ)

## பன்றியுடன் மோதிய மோ.சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டார்

வீதியைக் கடந்த பன்றி அங்கு வந்த மோட்டார்ச் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார்சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தர்மேந்திரா (வயது47) என்னும் ஆசிரியர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்னரும் பன்றி மோதியதில் மோட்டார்சைக்கிளோட்டியொருவர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. (9-117)

# மினிபஸ்ஸில் ஆசனத்துக்காக முண்டியடித்தவர் படுகாயம்!

மினிபஸ்ஸில் சீற் பிடிப்பதற்காக முண்டியடித்தவேளை ஒருவர் பஸ் சில்லுக்குள் கால் அகப்பட்டு படுகாயமடைந்தார்.

யாழ்மினிபஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிசாரகராகப் பணிபுரிபவரும், கரணவாய் கிழக்கைச் சேர்ந்தவருமான பி.அருந்தவராசா (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் சீற்றில் கைப்பையை வைப்பதற்காக முண்டியடித்து தள்ளுப்பட்டவேளையே பஸ்ஸின் முன்சில்லுக்குள் கால் அகப்பட்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (9-15)




உலகின் முன்னணி நாடுகளின் அரங்குகளில் நடைபெறும் கிரிக்கெட், புட்போல், டென்னிஸ் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளை உங்கள் வீட்டு வரவேற்பறையில் நேரடியாகக் கண்டு களிக்கலாம். அதுமட்டுமல்ல செய்திகள, சிறுவர் நிகழ்ச்சிகள், நாடகம் (தொடர்), சினிமா, விஞ்ஞான நிகழ்ச்சிகள், பொது அறிவுத் துணுக்குகள் இன்னும் இன்னும் பல........

உங்கள் விரல் அசைவில் Sats - Tech தரும் வினோதங்கள்.........

- ★ குறைக்கப்பட்ட விலையில் டிஸ் அன்ரனா சிஸ்டம்
- ★ கேபிள் T.V., உதிரிப்பாகங்கள்
- ★ ரிசீவர்கள், LNBF, DISH Antenna's, வயர்
- ★ மற்றும் K.T.V. டிகோர்டர் இணைப்புடன்
- ★ DISH T.V. டிக்கோர்டர் இணைப்புடன்
- ★ RAJ T.V. டிக்கோர்டர் இணைப்புடன்
- ★ STAR T.V. டிக்கோர்டர் இணைப்புடன்

உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலை, விற்பனைக்குப் பிந்தியசேவை, இலவச தொழில்நுட்ப ஆலோசனை.

தொடர்புகளுக்கு: **SATS - TECH ENGINEER'S**
**(National Video Centre)**
**182, K.K.S. Road,**
**Kokuvil, Jaffna.**
**Tele.Phone:- 021 222 5908**
**0777 710785.**

(33313)(34-29-11-12)


## சுழிபுரத்தில் சூழல் மாநாடு

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபை சூழல் பாதுகாப்பு மாநாடு ஒன்றினை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயத்தில் சமூக அபிவிருத்தி அலுவலர் வே.கந்தசாமி தலைமையில் இம்மாநாடு இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட மத்திய சூழல் அதிகார சபை அதிகாரி திருமதி வ.குமுதினி, சூழல் பாதுகாப்பு பகுதிப் பேச்சாளர் பொ.ஐங்கரநேசன், பொருண்மிய பகுதி இணைப்பாளர் சத்தியநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். (4-185)

## வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் ஆனி மாத வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டுரையை வைத்தியகலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளையும் மதிப்பீட்டுரையை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீதியாகசோமஸ்கந்தராஜக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (4-78)

நெஞ்சை விட்டு அகலாத

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 - 03 - 1950



மறைவு 07 - 07 - 2003

**திருமதி தவமணி திருநாமச்சந்திரன்**

திதி:25.06.2004

புன்னகை சிந்திடும் பொன் வதனமோடு
அன்பும் அறிவும் நிறைந்த பொக்கிஷமாய்
பெற்றெடுத்த குஞ்சுகளோடும் கரம்பிடித்த
கணவனோடும் சிறப்போடு சிலகாலம் வாழ்கையில்
காலன் செய்த சதியோ? விதியின் விளையாட்டோ?
காலமெல்லாம் எம்மோடு வாழவேண்டிய தெய்வம்
பாதிவழியில் எமைப் பிரிந்து சென்றதே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று
சென்றாலும் ஆறாது எம்துயரம் - நித்தமும்
உங்கள் நினைவுகளோடு வாழ்ந்திடுவோம்!

***உங்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.***

'சந்திரவாசா',
*கைதடி கிழக்கு, கைதடி.* (33423)(34-29-12-11) - குடும்பத்தினர்.


# மிதிவெடி அபாயக்கல்வி வாரம்

ஜூன் 21 தொடக்கம் ஜூன் 27 வரை




(சி35761)(29)

**District Mine Action Office, Jaffna**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்25

நீர்வேலி ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு த.காசிநாதர் தலைமையில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.(10-ரி)

★ ★ ★

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். (ஒ-161)

## புதிய நிர்வாகிகள்

புற்றளை மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.இந்திரராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவர் திருமதி எஸ். இந்திரராஜா, செயலாளராக பீகதிர்காமநாதன், பொருளாளர் திருமதி எஸ். கனகலிங்கம் ஆகியோருடன் எட்டு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (4-78)

### உபகரணங்கள் வந்துசேர்ந்தபோதும்

# இறால் பண்ணை அமைப்பதற்கு தகுந்த இடம் கிடைக்கவில்லை

கல்லுண்டாய் வெளியில் இறால் பண்ணை அமைப்பதற்கான உபகரணங்கள் வந்துசேர்ந்தபோதும் இடத்தைப் பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் அசமந்த நிலை காட்டிவருவதாக இறால் வளர்ப்பு ஊக்குவிப்பாளர் சங்கச் செயலாளர் வ.சிறீதரன் தெரிவித்தார்.

காக்கைதீவு மீன் சந்தை முதல் கல்லுண்டாய் பாலம் வரையான 330 ஏக்கர் நிலத்தில் இறால் பண்ணை அமைக்க இறால் வளர்ப்பு ஊக்குவிப்பாளர் சங்கம் தீர்மானித்தது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.மோகன்றாஸ் ஊடாக யாழ். அரச அதிபரிடம் இதற்கான நிலத்தைப் பெறுவதற்கான அனுமதியைப் பெறுமாறு கூறப்பட்டதாகவும் -

ஆனால், இது தொடர்பான நடவடிக்கைகளில் பிரதேச செயலகம் அசமந்தப் போக்கைக் காட்டி வருவதாகவும் -

இறால் வளர்ப்பு ஊக்குவிப்புச் சங்கம் பண்ணையை அமைக்கும் பணியை மேற்கொள்ள உபகரணங்கள் கொண்டுவரப்பட்டபோதும் இதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் - அவர் தெரிவித்தார்.

இந்த இடத்தில் பண்ணையை அமைப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரம் வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-6)

# வீதி ஒழுங்குகள் தொடர்பாக சாவகச்சேரியில் செயன்முறை

தென்மராட்சி,ஜூன்25

சாரதிகள் நல்லொழுக்க வாரத்தையொட்டி நேற்றுமுன்தினம் சாவகச்சேரிப் பொலீஸாரால் வீதி ஒழுங்கு விதிகள் பற்றிய செயன்முறைகள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என் அபேரத்ன, பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ. எரிக் றோகித ஆகியோரின் வழிநடத்தலில் செயன்முறைகள் நடத்திக் காண்பிக்கப்பட்டன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் இந்த செயன்முறைகளில் கலந்துகொண்டனர். வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் கடைப்பிடிக்கவேண்டிய வீதி ஒழுங்குகள், விபத்துகளைத் தடுக்கும் வழிமுறைகள் போன்றவை பொதுமக்களுக்கு செயன்முறை மூலம் காண்பிக்கப்பட்டன.

நகர்ப் பகுதியில் மாணவர்கள் வீதி விபத்துக்கள், வீதிஒழுங்கு விதிகள் பற்றிய அட்டைகளைத் தாங்கியபடி பொதுமக்களுக்கு அறிவுறுத்தினர். (ஒ-31-117)




சாரதிகள் நல்லொழுக்க வாரத்தையொட்டி சாவகச்சேரி பொலீஸாரால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வீதி ஒழுங்கு விதிகள் குறித்த செயன்முறைகளின்போது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மந்திகை-துன்னாலை வீதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

துன்னாலை வடக்கு, மந்திகை - துன்னாலை வீதிப்பகுதியில் குறிப்பாக மந்திகை ஆதார வைத்தியசாலையின் பின்புறம் இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் கழிவுகள் கொட்டப்பட்டு, சுகாதாரச் சீர்கேடு நிலவும் பிரதேசமாக மாறியுள்ளது.

அனுமதியின்றி களவாக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகள் உரப் பைகளில் கட்டி எடுத்துவரப்பட்டு இப்பகுதியிலுள்ள பற்றைகளுக்குள் போடப்படுவதால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால், அப்பகுதியில் குடியிருக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. தொற்று நோய்களினால் பாதிக்கப்படும் அபாயமும் தோன்றியுள்ளது. அவ்வீதியால் பயணம் செய்பவர்கள் துர்நாற்றத்தால் பெரும் அவதியை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

கொட்டப்படும் கழிவுகளை விலங்குகள் மற்றும் பறவைகள் எடுத்துச் சென்று அயற்பகுதிகளை அசுத்த சூழலுக்குள்ளாக்குகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

# அனுமதியின்றி சாராயம் விற்ற 14 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்25

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 14பேருக்கு யாழ் நீதிமன்றம் மொத்தம் 85ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சின்னத்தம்பி செல்வரத்தினம், இராசையா கணேசலிங்கம், பண்டாரி சின்னத்துரை, சிவசம்பு செல்வராசா ஆகியோருக்கு தலா 5ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும் 3ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்தும்படியும், செல்வரத்தினம் பெருமாள், கணபதிப்பிள்ளை யோகலிங்கம், கருணராஜா விஜயபாஸ்கரன், நாகலிங்கம் ஆறுமுகம், சுப்பிரமணியம் ராசலிங்கம், பண்டாரி செல்வராசா, றொக்ஷன் டயஸ், ராசிமுத்து, பொன்னுத்துரை பாக்கியராஜா ஆகியோருக்கு தலா 3ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும் 2ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ-6)

# மகப்பேற்று மனை மீண்டும் கொடிகாமத்தில் ஆரம்பம்

தென்மராட்சி,ஜூன்25

கொடிகாமம் மத்திய மருந்தக மகப்பேற்று மனை கடந்த 21ஆம் திகதி முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் படையினர் இதில் நிலைகொண்டிருந்தனர். இந்த மகப்பேற்று மனைக் கட்டடம் தற்போது புனரமைக்கப்பட்டுக் கடந்த திங்கட்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.தெய்வேந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்ததையடுத்து மத்திய மருந்தகம், வெளிநோயாளர் பிரிவு ஆகியன இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## கந்தன்காடு மயானம் சிரமதானம்

வலி.கிழக்கு,ஜூன்25

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் சூழல் பாதுகாப்பு மாத செயற்பாடுகளை முன்னிட்டு கோப்பாய் மத்தி கந்தன்காடு இந்து மயானம் பொது அமைப்புக்களாலும் பொது மக்களாலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

# வவுனிக்குளத்தில் நேற்றுமுன்தினம் கல்வி வளநிலையம் திறந்துவைப்பு

வவுனிக்குளம்,ஜூன்25

நோர்வே நாட்டின் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் 'றீடோ' திட்டத்தின் கீழ், வவுனிக்குளம் பாலி நகர்ப் பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட கல்வி வள நிலையத் திறப்பு விழா கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், 'றீடோ' நிறுவனத்தின இணைப்பாளர் க.ஜெயசீலன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

தமிழீழ தேசியக் கொடியினைத் பாண்டியன்குளம் அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணமுதன் ஏற்றி வைத்தார். கல்விவள நிலைய பெயர்ப் பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துணுக்காய் வலயப் பணிப்பாளர் மூர்த்தி திரை நீக்கம் செய்தார். புனரமைக்கப்பட்ட கட்டடத்தினைப் பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் க.பரந்தாமன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர் பாரிமகன், கலாசார உத்தியோகத்தர் பொன்.சாம்பசிவம், 'றீடோ' நிறுவன பாடவிதான இணைப்பாளர் ந.நவாஸ்சங்கர் மற்றும் முல்லை மாவட்ட இணைப்பாளர் முவரன் போன்றோர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-9-401)

# கரம்பகத்தில் சொந்த இடங்களைப் பார்வையிட்ட குடும்பங்களுக்கு!

தென்மராட்சி கிழக்கு, கரம்பகம் பிரிவில் தமது சொந்த இடங்களைப் பார்வையிட்டவர்கள் தமது காணிக்கான உறுதியின் புகைப்படப் பிரதி மற்றும் குடும்ப விவரங்களை ஒப்படைக்குமாறு அப்பகுதிக்கான கிராம அலுவலர் ந.இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களின் பின்னர் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களைப் பார்வையிட படையினர் அனுமதி வழங்கியதையடுத்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மக்கள் தமது குடியிருப்புகளைத் தினமும் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை - எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் உள்ள குடியிருப்புகளை அடுத்தமாதம் 6 ஆம் திகதி தொடக்கம் அப்பகுதி மக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

அப்பகுதியில் உள்ள 22 தென்னந்தோட்ட உரிமையாளர்கள் அடுத்தமாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் தமது தோட்டங்களைப் பார்வையிட படையினரால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் - அப்பிரிவுக் கிராம அலுவலர் பொ.நவரத்தினராசா தெரிவித்தார். (ஒ-117)

## கண்காட்சி

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை மட்டக் கண்காட்சி நேற்று கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இக்கண்காட்சியில் மாணவர்களின் ஆக்கங்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. காட்சியை பெருந்தொகையான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டுச் சென்றனர். (10)

## மோசமான நிலையில் தபாற்கந்தோர் வீதி

குடத்தனை,ஜூன்25

குடத்தனைச் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் தபாற்கந்தோர் வீதி மிகவும் மோசமான நிலையில் குண்டுங் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியால் செல்லும் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (4-78)

## ஆன்மீகச் சொற்பொழிவு

குடத்தனை,ஜூன்25

துன்னாலை வடக்கு, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை 'நலம்தரும் சொல்' என்னும் தலைப்பில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-78)

## சனசமூக நிலையத்துக்கு கணனி அன்பளிப்பு

கோப்பாய்,ஜூன்25

கோப்பாய் [illegible] சனசமூக நிலையத்திற்கு [illegible] கனடாவில் வசிக்கும் முன்னாள் [illegible] உறுப்பினர்கள் இரண்டு கணனித் தொகுதிகளையும் வர்ணத் தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மேற்படி கணனிகள் மூலம் இப்பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களிற்கு இலவச கணனிப் பயிற்சியை வழங்க சனசமூக நிலையத்தினர் திட்டமிட்டுள்ளனர். (9-72)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் வோல்ரர் ஸாலெஸ் இயக்கிய "சென்றல் ஸ்ரேசன்" (Central Station) எனும் ஸ்பானிய மொழித் திரைப்படம் ஆங்கிலத்துணைத் தலைப்புகளுடன் காண்பிக்கப்படவுள்ளது.

பிறேஸில் நாட்டு வாழ்க்கைத தளத்தைப் பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இப்படம் 1998ஆம் ஆண்டுக்குரிய சிறந்த பிறமொழித் திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதினைப்பெற்றதாகும்.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெறலாமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8-9)

## பரிசளிப்பு விழா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருச்சபைகளின் குருமுதல்வர் வண. எஸ்.பி.நேசகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் குருநாகல் ஆயர் அதிவண. குமாரபண்டார சாமுவேல் இலங்கசிங்க மற்றும் டாக்டர் லக்மினி பிரியகாந்தி இலங்கசிங்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (-10-ரி)

## நூலகங்கள் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்25

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் நூலகங்கள் யாவும் நாளை சனிக்கிழமை முழுநாளும் மூடப்பட்டிருக்கும் என வலி.பிரதேசசபை உள்ளூராட்சி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

நூலகவியல் தொடர்பான பயிற்சி நெறியில் நூலகங்களின் ஊழியர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் மேற்படி நூலகங்கள் மூடப்படும் என பொது மக்களுக்கும், வாசகர்களுக்கும் அவர் தெரிவித்துள்ளார். (10-185)

# கேள்விக்கூறு கோரல்

எமது சமாசத்தால் அமைக்கப்படவுள்ள 20x50 அடி விஸ்தீரணம் உள்ள கட்டடத்திற்கு மேசன்வேலை, கூரைவேலை ஆகியவற்றுக்கான கூலிக்கேள்வியும் இரும்பு சுருக்குகேற், கூரை ரஸ் மற்றும் மரக்கதவு, யன்னல் என்பவை செய்து வழங்குவதற்கான கேள்வியும் கோரப்படுகின்றது.

விவரங்களை ரூபா 100/= கட்டணம் செலுத்தி முதலாம் மாடி, 127, காங்கேசன்துறை வீதியிலுள்ள வங்கிச் சமாசப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியுடன் ரூபா 1000/= மீளளிக்கும் வைப்பாகச் செலுத்தவேண்டும். கேள்வி முழுதுக்குமாகவோ, தனித்தனியாகவோ இருககலாம். விண்ணப்ப முடிவு திகதி: 06.07.2004ஆம் திகதி நண்பகல் 12 மணி.

கேள்விகளை ஏற்பதும், நிராகரிப்பதும் இயக்குநர் சபையின் முடிவாகும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் வ-து.
முதலாம் மாடி, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 24.06.2004

- தலைவர்.

(சி-35796)(34-11-19-24)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2629232 இலிருந்து
2645344 வரை

சீட்டிழுப்பு இல. 1515
திகதி 23.06.2004

வெற்றி எண்கள்
**05 12 27 36 46**

போனஸ் எண்
**26**

ஜக்பொட் பரிசு ரூபா. **55,98,200/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 55,98,200/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 101 | 10,000/- | 10,10,000/- |
| 3 | 5,092 | 500/- | 25,46,000/- |
| 2 | 84,186 | 20/- | 16,83,720/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 103,980 | 10/- | 10,39,800/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
**Rs. 64,02,350/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 64,79,520/-

தொடர் இல. 3594935 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன் 26 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2637350-5-21
2633049-1-28
2636440-8-96
2632500-0-50
2630219-6-40


## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வெளியிடும் 'இசைவிடு தூது' சமாதானப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேற்படி மன்றக்கலைத் தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

# பண்டிதமணியின் பிறந்ததின விழாவும், நூல் வெளியீடும்

## வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்25

'இலக்கிய கலாநிதி' பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 105 ஆவது பிறந்ததின விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன். பாக்கியத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் அருளுரையாற்றுவார்.

'கந்தபுராண கலாசாரம்' நூல் வெளியீடு இடம்பெறும்.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் நூலை வெளியிட்டு வைப்பார். கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் செல்லப்பா நடராசா முதல் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

பண்டிதர் செ.திருநாவுக்கரசு நயப்புரை நிகழ்த்துவார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் முன்னாள் தலைவர் பண்டிதர் ச.சிதம்பரப்பிள்ளையின் நினைவுரையை சைவபரிபாலனசபைச் செயலாளர் சைவப்புலவர் மு.திருஞானசமபந்தபிள்ளை நிகழ்த்துவார். (எ-3)

# ஏல விற்பனை அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அடகு நகைகள் நாளை (26-06-2004) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 212 (214), ஆஸ்பத்திரி வீதி, யாழ். கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும். ஏலத்தில் தங்க நகைகளைப் பெற விரும்புவோர் குறித்த நேரத்துக்குச் சமுகம் தரவும்.

-முகாமையாளர்.

(C/35975)(42-11-19-24)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 19 - 02 - 1935



உதிர்வு 06 - 06 - 2004

## அமரர் கந்தையா மகேஸ்பரன்

நாளை (26.06.2004) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கத்தாப்படி வீதி,*
*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

(33464)(40-12-11)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சந்திரன்கிராய்குளப் புனரமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

மட்டுவில் சந்திரபுரம் சந்திரன் கிராய்குளம் 'நியாப்' திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கென 10 லட்சத்து 88ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசம், யாழ். செயலக 'நியாப்' திட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் எஸ். கணேசராஜன் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் இக்குளத்தின் மூலம் பயன் பெறும் பயனாளிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-5-ரி)

## ஆசிரியப் பயிற்சியில் மாற்றங்கள்

கொழும்பு,ஜூன்25

தேசியக் கல்விக் கற்கை நெறிப் பீடங்களில் ஆசிரியர்களுக்கான பயிற்சியில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆசிரியர் பயிற்சிக்கான பாடவிதானம் மற்றும் கற்கை முறைமைகள் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய இரு பாடங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. அதேவேளை, முகாமைத்துவ நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேசியக் கல்விப் பீடங்களில் ஆண்டு தோறும் 3 ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒழுக்கக்கோவை

கொழும்பு,ஜூன்25

உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதி நிதிகளுக்கு ஒழுக்கக்கோவை ஒன்றை ஏற்படுத்துவதற்கான புதிய நகல் சட்டமூலம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று மகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.


பொதுமக்கள் நேரடித் தொடர்பு கொள்ளும் தமது அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்கள் பொருளாதார, கலாசார அபிவிருத்திக்குப் பாரிய பங்களிப்பைச் செய்யமுடியும் என்றும் -

இதுதொடர்பாகப் புதிய அமைச்சர்கள், மாநகர முதல்வர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்த இருப்பதாகவும் - அவர் கூறினார்.


கணனித் துறையில் நீங்கள் ......

ஓர் வல்லுனராக விரும்புகிறீர்களா
ஓர் பட்டதாரியாக ஆசைப்படுகிறீர்களா
ஓர் கௌரவமான வேலை வாய்ப்பினை எதிர்பார்க்கிறீர்களா
வெளிநாடு சென்று கல்விகற்க விரும்புகிறீர்களா

உங்கள் கனவுகள் நனவாக !
ஒரே வழி !



BTEC **HND**
**World Class Qualifications**

*Delivered Locally......*
*Recognised Globally*

Edexcel International, UK

**Higher National Diploma in Computing / Software Engineering / Business Information Technology**

**HND Leads to BSc. (Hon.)**

**New Batch Starts on : 14 / 07 / 2004**

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
" An Edexcel Approved Training Centre "

**IIS** , # 100, Clock Tower Road, Jaffna.
Email: iis@sltnet.lk T.P No: 021 222 2831 / 021 222 6933

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் பூவாய் 16 - 03 - 1983



விண்ணுலகில் ஜோதியாய் 07 - 07 - 2003

### நாகராசா சுபாஸ்கரன்

**கலவெட்டித்திடல் - புளியம்பொக்கணை**

அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிவிளக்காய் பண்பின் சிகரமாய்
சவால்களுக்கு சரித்திர நாயகனாய் எமக்கெல்லாம்
நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! கனவுகள் நிறைந்த - பு,வே
நீ வாடமுன் உதிர்ந்ததேன்? நீ எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் -
உன் நினைவுகளை எங்கள் நெஞ்சம் மறக்குமா? நீ
இவ்வுலகை விட்டு மறைந்தாலும் எங்களுக்குள்ளே
நீங்காத அலையாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்.

*உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.*

துயரம் நிறைந்த நினைவுகளுடன்:
அன்பு அப்பா,
அண்ணன்மார், தங்கைமார்.

கலவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை. (33450)(34-11-19-24)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில்* 13 - 08 - 1964



*இறைவன் அடியில்* 07 - 07 - 2003

### அமரர் தர்மலிங்கம் ஜெகதீஸ்வரன்

திதி: 25-06-2004

இறைபணியும் பிறர் நலமும்
இலட்சியமாய்க் கொண்ட நீ
விண்ணகம் விரைந்து ஓராண்டு - ஆனதையா
மண்ணகம் உன் பணி மறக்குமோ - மகனே

- ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
தந்தை
திரு.க.தர்மலிங்கம்.

*சிலம்புப் புளியடி,*
*சங்கானை.* (33446)(42-11-19-24)

## கண்ணீர் அஞ்சலி

ச.மு.க. சமாசத்தின் முக்கிய உறுப்பினரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய திரு.பிரான்சிஸ்சேவியர் அவர்களின் (ஊழியர் - யாழ். போதனா வைத்தியசாலை) அன்புத் தந்தை

### சவரிமுத்து ஜோசெப்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்,
ச.மு.க. சமாச. பிராந்திய சபையினர்.

(33458)(35-11-19-24)


அதி விசேட சலுகைகளுடன்
புதிய பிரிவு ஆரம்பம்
27.06.2004 காலை 10.00 மணி

ஒரு கற்கை நெறிக்குப் பதிவு செய்வதனூடாக
மற்றுமொரு கற்கை நெறிக்கான
கட்டணச் சலுகையைத் தட்டிச் செல்லுங்கள்.

DIPLOMA COURSES
Diploma in MS Office
Diploma in Internet Technology
Diploma in Hardware Engineering
Diploma in Desk Top Publishing

- அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 3வது பிரிவு ஆரம்பமாகவுள்ளது.
- A/L பரீட்சையை முடித்துக்கொண்ட மாணவர் - களுக்கான விசேட பிரிவு
- தவணை முறையிலான கட்டணச் சலுகை
- உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
தலைமை அலுவலகம் : # 419, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனங்கள் : , நெல்லியடி. , சங்கத்தானை, சாவகச்சேரி.
"அனைவருக்கும் கணனிக் கல்வி"


# லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் ஆயிரத்து 100 முறைப்பாடுகள் தேக்கம்!

கொழும்பு,ஜூன்25

லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிக்கும் ஆணைக்குழு, செயலிழந்துள்ளதன் காரணமாக இதுவரையில் லஞ்ச ஊழல்கள் மற்றும் முறையற்ற விதத்தில் சேர்க்கப்பட்ட சொத்துகள் தொடர்பான ஆயிரத்து 100 முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமல் தேக்கமடைந்துள்ளன என்று கூறப்படுகிறது.

இவ்வாறு குவிந்துள்ள முறைப்பாடுகளுள் ஆளும்கட்சி மற்றும் எதிரணியைச் சேர்ந்த பல்வேறு அரசியல்வாதிகள் 30பேருக்கு எதிரான முறைப்பாடுகளும் உள்ளன என்று லஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுபோன்றே, விசாரித்து முடிக்கப்பட்டுள்ள லஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான நூற்றுக்கு மேற்பட்ட சம்பவங்கள் மீது இதுவரை வழக்குகளைத் தாக்கல்செய்ய இயலாதுள்ளமைக்கு மேற்படி ஆணைக்குழு செயலிழந்து உள்ளதே காரணமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதியரசரான ரீ.என்.அபேவீரா கடந்த ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி அன்று காலமானார். அதன் பின்னர் அந்த உறுப்பினர் பதவிக்குத் தகுதியான ஒருவர் இதுவரை நியமிக்கப்படாதுள்ளதே மேற்படி ஆணைக்குழு செயலிழந்துள்ளமைக்குக் காரணமாகும்.

# காலாவதித் திகதியை மாற்றிய பிரபல நிறுவன ஊழியர் கைது!

கொழும்பு,ஜூன்25

காலாவதியான பொருள்களின் பாவனைக்காலத் திகதியை மாற்றினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பிலுள்ள பல்பொருள் விற்பனை நிறுவனங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகளுக்குப் பொருள்களை விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றின் ஊழியரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிணையில் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட மேற்படி சந்தேகநபர் மேலதிக நீதிவான் எல்.லியனாராச்சியின பணிப்பின் பேரில் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்(நிக்கொட்)
**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆஅவ" கடன் இல. 1846-SRI(SF)**

# கேள்வி அறிவித்தல் 30

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் (நிக்கொட்) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்டநாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒருபகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாகக் கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | AM/NECORD/IR/02 | அம்பாறை கஞ்சிகுடிச்சாறு புனரமைப்பு தொகுதி 6 | M7 | 37,000/= |
| 02. | AM/NECORD/IR/02 | அம்பாறை கஞ்சிகுடிச்சாறு புனரமைப்பு தொகுதி 7 | M7 | 37,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன், அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்படல்வேண்டும்.
   IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். ( தொலைபேசி 026-222 7434. தொலைநகரி 0262227401 மின்னஞ்சல் necord@sltnet.lk)
6. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆனி 25 இலிருந்து 2004 ஆடி 8 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.
7. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இருஉறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.
8. அவ்வவ்வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச் சபை, NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 ஆடி 14 முற்பகல் 2மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 ஆடி 8 முற்பகல் 11.30 மணிக்கு NECORD, 140, மின்சாரநிலையவீதி, திருகோணமலையில் நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**திரு.த.லங்காநேசன்,**
கேள்விச்சபைத் தலைவர்,
**NECORD**, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை.

(சி-35792)(34-11-19-24)

# அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தசுவாமி கோவில்

## பிரதமகுருவும் தர்மகர்த்தாவும் ஆகிய

# சிவப்பணிச் செல்வர் அருளாளர் சீனியர் சிவகுருஐயர்

## அவர்கள் சிவபதப்பேறடைந்த

# 11ஆம் நாள் நினைவுச் சிறப்பிதழ்

## 25.06.2004 வெள்ளிக்கிழமை



சிவப்பணிச் செல்வர் சீ.சிவகுருஐயர்



அவர் தம் பணியினால் நிமிர்ந்துநிற்கும், ஆலயமும் திருமஞ்சமும்.

### வாழ்க்கைச் சுருக்கம்

| | | |
|---|---|---|
| தந்தை | : | அருளாளர் ப.சீனியர் |
| தாய் | : | சீனியர் சின்னப்பிள்ளை |
| பிறப்பு | : | 1924.09.24 (கார்த்திகை நட்சத்திரம்) |
| உடன்பிறப்புக்கள் | : | திருத்தங்கம் |
| | : | குமரகுரு |
| | : | வள்ளிப்பிள்ளை |
| கல்வி | : | ஆரம்பக்கல்வி - சரஸ்வதி வீத்தியாசாலை, அச்சுவேலி |

மரபுவழிக் கல்வியாக சோதிடம், மனையடி சாத்தரம், நிகண்டு, புராணங்கள் என்பனவற்றைப் பண்டிதர் ஆறுமுகத்திடம் கற்றார்.

| | | |
|---|---|---|
| மனைவி | : | சோதி |
| ஆண்பிள்ளைகள் | : | சிவசுப்பிரமணியம் ஐயர், பாலசுப்பிரமணியம் ஐயர். |
| பெண்பிள்ளைகள் | : | செல்வரத்தினம், தங்கரத்தினம். |
| இறையடி | : | 2004.06.15 (திருக்கார்த்திகைத் திருநாள்) |

**ஐயாவை அலங்கரிக்கும் பட்டங்கள்:**

1) சிவப்பணிச் செல்வர்
2) சிவஅனுபூதிச் செம்மல்
3) அருட்செல்வர்
4) ஆன்மீகச் செல்வர்
5) அருளாளர்
6) அருள்வள்ளல்

**நிறைவேற்றிய திருப்பணிகள்:**

1) சித்திரத்தேர் வெள்ளோட்டம் (1971)
2) திருமஞ்ச வெள்ளோட்டம் (1986)
3) கோயில் புனரமைப்பு (2000)

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் வழங்கிய அருளாசி

அன்புள்ளவர்களுக்கு,

திரு.சீ.சிவகுரு அவர்களின் மறைவை அறிந்து மனநெகிழ்வு அடைந்தோம். காட்டுமலை கந்தசுவாமி கோயில் குருவாக இருந்து நீண்டகாலம் சமய, சமூக, வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர். எல்லோரோடும் அன்பாகப் பழகும் சுபாவமும் செய்கின்ற கடமைகளை நிறைவாகச் செய்யவேண்டுமென்ற மன விருப்பமும் கொண்டவர். ஆசாரம் நிறைந்த திரு.சீ.சிவகுரு அவர்களின் மறைவு அனைவருக்கும் மனவேதனையைத் தந்துள்ளது. சிவகுருவுக்கு நாம் செய்யும் அஞ்சலி அவர் செய்த பணிகளை நாம் தொடர்ந்து செய்வதே ஆகும். திரு.சிவகுரு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் அவர்களின் உள்ளத்திலிருந்து.......

"நாவலம்பதி வாழ்ந்த நல்ல நம் சிவகுருவே
காலமெலாம் காட்டுமலை கந்தா உனைத் தொழுதார்
ஆலம் உண்ட கண்டன் மகனே! நினதடியில்
ஞாலமுள்ள வரையுமவர் வாழ நல்லருள் தருவாய்!"

கி.சிவநேசன்,
நா.ம.உ.
யார்க்கரு, கரவெட்டி.

## ஆன்மீகச் செல்வர் சிவகுரு ஐயா

சிவகுரு ஐயா அறிவிலும் அடக்கத்திலும் சிறந்தவர். கோயில் பூசகருக்கு ஏற்ற பக்திபூர்வத் தோற்றம். பேச்சிலே செழுமை, முயற்சியிலே முன்மாதிரியானவர். தந்தையின் பின் சிவகுரு ஐயாவின் ஆளுமையில் அரைநூற்றாண்டு காலமாக காட்டு மலைக்கந்தன் நித்திய பூசைகளும், கோவில் பரிபாலனமும், புனரமைப்பும் பிரமிக்கத் தக்கவகையில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. ஐயா அவர்களிற்கு 3ஆவது துணையாகக் கோயிலைக் கட்டியெழுப்பிய மக்கள் பெருமைக்குரியவர்கள். ஏனெனில், பல நூற்றாண்டு கால சரித்திரம் உள்ள கோயில்களின் சிறப்பை 75 வருடங்கள் மட்டும் கொண்ட காட்டுமலை பெற்றுவிட்டது.

சிவகுரு ஐயா பூரண வாழ்வு வாழ்ந்து 80 வயதில் நிறைவு கண்டார். ஐயா அவர்களின் ஆத்மா பரமாத்மாவின் ஜோதியுடன் கலந்துவிட்டது.

வணங்குகிறேன்!

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
யாழ். மருத்துவபீடம்.

மலர் அமைப்பு :
வரதராசன், நாவலம்பதி

## தெய்வீக சிவத்தொண்டன் தெய்வமலரானார்....

சிந்தனையில் தினமும் சிறப்பான எண்ணங்களுடன் வாழ்ந்தவர். சிங்கார வேலனை சிரம்தாழ்த்தி வணங்கிட வழி பல அமைத்தவர். தெய்வீக சிவதொண்டன் தெய்வ மலரானார். இவர் காலமெல்லாம் கந்தன் பணியேயென் களிப்புடன் வாழ்ந்தவர். சமயாசாரம், ஒழுக்க சீலம் மிக்கவர். கந்தபுராணத்தைக் கற்று அதன் மீது மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்கினார்.

காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலில் பல திருப்பணிகளை நிறைவேற்றிப் புகழ்மிக்க சிவப்பணிச் செல்வரானார். காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் புனரமைப்புப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட சிவகுரு அவர்களின் பணி பூரணத்துவம்பெற்று விளங்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன்
பிரதேச செயலர்,
வலி.கிழக்கு, கோப்பாய்.

## சிவகுரு சிவம் ஆகும்...

ஆலயங்கள் சமுதாயத்தின் இதயம் போலத் திகழ்கின்றன; மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டும் கேந்திர நிலையங்களாகக் காணப்படுகின்றன. மக்கள் மத்தியில் தெய்வ நம்பிக்கை வளர்வதற்கு ஆலயத்தின் பிரதம குருவும் வழிகாட்டியாவார். கோலமும் சீலமும் ஒருங்கே அமையப்பெற்ற சிவகுரு அவர்கள் அச்சுவேலி நாவலம்பதி மக்களுக்குக் குருவாகவும் ஆன்மீக வழிகாட்டியாகவும் வாழ்ந்துவந்தார். உலகம் உய்வதற்காக உதித்து வந்த கந்தவேள் பெருமானின் நட்சத்திரமாகிய கார்த்திகைத் தினத்தில் முருக உபாசகராகிய சிவகுரு ஐயர் அவர்கள் இறையடி எய்தினார். அச்சுவேலி நாவலம்பதி மக்களின் உள்ளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் சிவகுரு ஐயா அவர்கள், தான் நாள்தோறும் பூசித்து வந்த கந்தவேள் பெருமானின் கார்த்திகை உற்சவ நாளிலே இறையடி எய்திவிட்டார்.

சிவகுரு ஐயாவின் குருவருளும், காட்டு மலைக் கந்தன் திருவருளும் அனைவருக்கும் பூரணமாகக் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
உதவிப்பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவலர்
திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## குடும்பத்தாரின் நன்றி நவிலல்

காட்டுமலைக் கந்தன் கார்த்திகைத் திருநாளில் சோதியுடன் கலந்துவிட்ட எங்கள் ஐயா சிவகுருவின் சிவப்பேறு அறிந்து பல வழிகளிலும் எமக்குத் துணை நின்ற உற்றார், உறவுகள், நண்பர்களுக்கும் ஐயாவின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமாக அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆன்மா ஈடேற்ற அருளாசி வழங்கிய சைவப்பெரியார்கள், அபிமானிகளுக்கும், அன்பர்களுக்கும் குறிப்பாக நோயுற்ற வேளைதனில் நாடிவந்து சேவை செய்யும் உடுப்பிட்டியூர் Dr.சிவசம்பு அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் என்றென்றும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"குருவருள் திருவருளால் அனைவருக்கும் உண்டாகுக"

நன்றி.

## பாலர் விளையாட்டு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பாலர் பாடசாலையின் இவ்வாண்டுக்கான விளையாட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு நலலூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-ரி)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபையினரால நடத்தப்படும் மட்டுவில் கலைமகள் முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல 2.30 மணிக்கு க.துரைரத்தினம் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும். (ஐ-117)

# விளையாட்டுத் துறையினருக்கு நாளை கலந்துரையாடல்

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் அடுத்தமாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்க உறுப்பினர்கள், மெய்வல்லுநர் தொழில நுட்ப அலுவலர் பரீட்சையில் சித்தியெய்திய அலுவலர்கள் மற்றும் யாழ். மாவட்டத்தில் கடமைபுரிகின்ற விளையாட்டு அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோரை இந்தக் கலந்துரையாடலில் முக்கியத்துவம் கருதி பங்குகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டிருக்கிறார். (ஐ)


## கணனி அச்சகத்திற்கு
ஆள்கள் தேவை

- ஒவ்செட் (டேவிசன் A/3) இயக்குநர்
- கணனி (கொம்பியூட்டர்) இயக்குநர் (இருபாலாரும்)
- பைண்டர்

உடன் தேவை

அச்சகத்தில் வேலை செய்த முன் அனுபவம் வீரும்பத்தக்கது.
நேரில் தொடர்பு.

துயா அச்சகம்
கம்பியூட்டர் ஒவ் செட் பிறிண்டேஸ்
138, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்,
நாவலர் பாடசாலை முன்பாக
(சீ35811)


## கண்ணீர் அஞ்சலி

யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமைபுரியும் திருமதி யோ. ஞானேஸ்வரன் அவர்களின்

அன்புத் தந்தையார்

ஞானமூர்த்தி ஐயாத்தம்பி

அவர்கள் 22.06.2004 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்,
யாழ்/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
(33472) (43-16-14-36)

## அறிவித்தல்
## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (33467)(43-16-14-36) - செயலாளர்.


## NEW SCIENCE ACADEMY
(கந்தன் கருணை)

கோயில் வீதி, நல்லூர்.

2005 A/L

DAY CLASS (PERSONAL CLASS)

(2004 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)

திங்கள் முதல் வெள்ளிவரை

| | | |
|---|---|---|
| Com.Maths | : திரு.செந்தில்ராஜ் | 8.00 |
| Chemistry | : திரு.சிவத்திரன் | 9.30 |
| Physics | : திரு.குகன் | 10.30 |
| Com.Maths | : திரு.ராஜன் | 10.30 |
| Biology | : திரு.கெங்காதரன் | 2.30 |

ஆரம்பம்: 28.06.2004 திங்கள் காலை 8.00
(33460)(34-14-16-36)

## நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி

DAY CLASS
PAPER CLASS

இணைந்த கணிதம்
திரு.B.ரவீந்திரன்
இரசாயனவியல்
திரு.அன்பழகன்
வகுப்புகள் நடைபெறுகின்றன.
(சீ35840)

## A/L - 2006, 2005 மீட்டல்

Tam. - பத்மநாதன்
Log. - ஜெயசுரேஸ்
H.C. - சுரேஸ்
Geo. - கிரிதரன்
P.si. - பொன்சந்துரு
Dra. - சத்தியா

புதிய பிரிவுகள்
ஆரம்பம் 26.06.2004 சனி 9 மணி

நியூட்டன் - யாழ்நகர்
ஆரிய குளம் சந்தி அருகில்.

## இன்று அல்வாய் மாலைசந்தை

அருள்மிகு ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயத்தில்
நடைபெறும் மகாகும்பாபிஷேகம்
சிறப்புற நடைபெற வாழ்த்தி அருள்வேண்டுகின்றோம்.

“டோறா மல்ரி கொம்ளெக்ஸ்”

பிரதான வீதி, நெல்லியடி.

நீங்கள் விரும்பும் புதிய, பழைய ஓடியோ வீடியோ இசைத்தட்டுக்கள், DVDக்கள், டயலொக் Sim, Kit காட்கள் (மொத்தமாகவும், சில்லறையாகவும்) அதிகம் பார்த்து மகிழும் சன் டீவி, ஜெயா டீவி, மெகா தொடர் நாடகங்கள் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றை நெல்லியடியில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

டோறா மல்ரி கொம்ளெக்ஸ்
தொலைபேசி, பக்ஸ்: 226 3432 (சி-35794)(36-14-16)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 29 |  | 06 |
| 12 | | 06 |
| 1925 | | 2003 |

## Dr.சிதம்பரப்பிள்ளை நாகரட்ணம்

திதி:ஆனி அட்டமி 25.06.2004

அப்பா எங்களை அன்புடன்
பாசமாய் பண்பாய் வளர்த்தீர்!
காடு மேடு பாராமல் உம்முடைய
புனிதமான தொழிலைப் புரிந்தீர்!
நோயாளிக்கு உமது ஆறுதலான
வார்த்தையே மருந்தாக இருந்தது!

உங்களுடைய ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (33468)(37-14-16-36)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மரும்க்கள், பேரப்பிள்ளைகள்.

## கைமாறிவிட்டது

உணவுப் பொருள்கள் அடங்கிய பிரயாணப்பை (கறுப்பு நிறம்) நேற்று (24.06.2004) வியாழக்கிழமை முகமாலையில் கைமாறிவிட்டது. இதனை மாறி எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Dr.V.ஏகாம்பரம்
வில்லுமதவடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
T.P.:0777302221
(33470)(37)


## நாகம்ஸ் சுன்னாகம்

சூரியா, மாதவன், மீராஜஸ்மின், ஈசா நடித்த



தினசரி: 11.00, 3.00,
(C/35739) (12)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், த்திரிசா, பிரகாஸ்ராஜ் நடித்த



கில்லி

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/34517) (12)

## லக்சுமி இணுவில்

அஜித், சிநேகா, ரகுவரன், வையாபுரி, கருணாஸ் நடித்த




தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்
விசேட காட்சியாக வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும் (33326) (40)

## நிறைச்செல்வம் சங்கானை

முரளி, கௌசல்யா, விவேக் நடித்த

காலமெல்லாம் காதல் வாழ்க

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
EXPOGURE [இரவு 8.45]
(C.35653)(12)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துக்குமாரு ஆச்சிக்குட்டி

சொக்கன், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, புகையிரத நிலைய வீதியை (நந்தாவில் அம்மன் கோவிலிற்கு அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு ஆச்சிக்குட்டி நேற்று (24.06.2004) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தங்கச்சி, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகநாதன் (சவுதி), ஜெகராணி (கனடா), இன்பராணி (ஜேர்மனி), ஜெயபவானி (ஜேர்மனி), புஸ்பராணி (ஜேர்மனி), ஜெயந்தி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகதத்ர் - பிரதேச செயலகம் - தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மஞ்சுளா, இந்திரநாதன (கனடா), கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), தர்மசேனன் (ஜேர்மனி), ரசிக்குமார் (ஜேர்மனி), லம்போதரன் (Marketing Executive, Ceylinco Insurance Co.Ltd. Jaffna) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரதநிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு. (33471)(37-14-16-36)

தகவல்:
ஜெயந்தி (மகள்).

## இராசன் அண்ணாச்சாமி



இமையாணனைப் பிறப்பிடமாகவும் நாவலடி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசன் அண்ணாச்சாமி அவர்கள் 22.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசன் -சின்னக்குட்டி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பர்-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகமணி மற்றும் கிருஸ்ணன் .(பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனரும் இராசேந்திரன், ரங்கநாயகி, விமலா தேவி, இரங்கநாதன், செல்வராணி, உதயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கம், சிவலிங்கம், கந்தசாமி, தவமணி (லண்டன்), செல்வநாதன் (ஆசிரியர்), ஜெயரட்ணம் (கட்டி, துர்க்கா பொடி வேக்ஸ்), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரூபராணி, ஸ்ரீகாந்தராசா, ஸ்ரீபாஸ்கரன், கல்யாணி, ஸ்ரீமுருகன், அருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.06.2004) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி. (சி-35806)(36-14-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஞானமூர்த்தி ஐயாத்தம்பி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி ஐயாத்தம்பி 22.06.2004 அன்று சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிமுத்து அவர்களின் பாசமிகு கணவரும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்), செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைரமுத்து (நீர்ப்பாசனத் திணைக்களம்), ஞானேஸ்வரன் (கிராம அலுவலர் பூநகரி), சுப்புலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசசிங்கம், ஆச்சிமுத்து, பொன்னுத்துரை, நல்லையா மற்றும் குமாரசாமி (கிராம அலுவலர், சாவகச்சேரி), ஏகாம்பரம் (விவசாயப் போதனாசிரியர், உசன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அசோகன், புஸ்பலதா (லண்டன்),புஸ்பராசன் (லண்டன்), புஸ்பரஜனி, புஸ்பகாந்தன், அனோஜா, வானுஜா, மதுரங்கன், நிரோசா, நிவேதன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் பிரீதா, யதுன் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (26.06.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (33473)(36-14-16)

தகவல்:
மருமகன்
க.ஞானேஸ்வரன்.

## Dr.மாரிமுத்து பாலசுந்தரம்

மலேசியாவைச் சேர்ந்த Dr.மாரிமுத்து பாலசுந்தரம் 22.06.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மலாயன் பென்சனர் திரு.திருமதி இராமலிங்கம் மாரிமுத்துவின் மூத்த மகனும் மூளாயைச் சேர்ந்த திரு.திருமதி Dr.இராமலிங்கத்தின் மருமகனும் அருந்ததிதேவியின் அன்புக் கணவரும் அச்சுதா, ஆனந்தா, சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், ஞானசுந்தரம், நிதிபாக்கியம், இராமசுந்தரம், விவேகசுந்தரம், ஆனந்தசுந்தரம், குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.06.2004 அன்று மலேசியாவில் நடைபெற்றன,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

“பாக்கிய வாசம்”
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (சி.35809)(37-14-16-36)

தகவல்:
திருமதி சி.குணபாக்கியம் (பேபி)
சகோதரி.

# கருணா விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் மங்கள இதனைத் தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான அலிஸாகிர் மௌலானாவே கருணா குழுவினரை கொழும்புக்கு அழைத்து வந்துள்ளார். கருணா குடும்பத்தினருக்கு மிலிந்த மொறகொட எம்.பி. லண்டன் விசா பெற்றுக்கொடுத்துள்ளார்.

"பாதுகாப்புப் படை அதிகாரிகள் சிலரும் துணைபுரிந்திருக்கிறார்கள் என்று நன்கு தெரிகின்றது. அதை மறுக்கமுடியாது. ஆனால், அவர்களுக்கு அவ்வாறு செயற்பட அரசு அதிகாரமோ, உத்தரவோ வழங்கவில்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். கருணா தரப்பு செல்வதற்கு ஐ.தே.கட்சியின எம்.பி. ஒருவரே உதவினார் என்பது ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றாகவே தெரியும். இந்த உண்மைகளை 'சுடர் ஒளி' ஆசிரியர் தலையங்கத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளது." -என்று கூறி கடந்த 23ஆம் திகதிய 'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வாசித்துக்காட்டினார் அமைச்சர் மங்கள.

"கருணாவை ஆயுதமாகப் பயன்படுத்தி, புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, சமாதானப் பேச்சுக்களைப் பின்போட்டு வருகின்றது அரசாங்கம் என அரசின் மீது பழிபோட்டு வந்தனர் ஐதேகயினர். ஆனால, திரைமறைவில் இந்த நாடகத்தை இயக்கியவர்கள் யார் என்ற உண்மை இப்போது வெளிப்பட்டுவிட்டது.

"கருணா விவகாரத்தில் இன்றைய அரசுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் சமாதானப் பேச்சு ஆரம்பமாகும். நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் மீண்டும் இங்கு வருகிறார்" - எனவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

"அரசாங்கத்திற்கும் கருணா விவகாரத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று கூறுகிறீர்கள், ஆனால் ஜனாதிபதியின் பொறுப்பில இருக்கும் பாதுகாப்புப்படை அதிகாரிகள் சிலரும் உடந்தையாக இருந்துள்ளனர். கருணாவுக்குக் கொழும்பில பலத்த பாதுகாப்புக் கொடுத்துள்ளனர். அரசுக்குத் தெரியாமலா இவை எல்லாம் நடந்தன?"- எனச் செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு நேரடியாகப் பதில அளிக்காத அமைச்சர் மங்கள "பாதுகாப்புப் பிரிவினருக்கும் அரசியல் விருப்பு வெறுப்புக்கள் இருக்கலாம். அப்படி ஒரு சிலர் தொடர்புபட்டிருக்கலாம்" - என்றார்.

'அரசாங்கத்துக்குத் தெரியாமல் பாதுகாப்புப்படையினர் தன்னிச்சையாக செயல்படுவது அரசாங்கத்திற்கே ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லையா? என செய்தியாளர்கள் அமைச்சரை மடக்கினர்.

"உண்மைதான், இவ்விவகாரம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்"- என அமைச்சர் பதில் அளித்தார்.

**கொழும்பில் பாதுகாப்பு**

"தலைநகரில் முக்கியமான கேந்திர நிலையங்கள் அனைத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன"- என்றார் அமைச்சர்.

"இரகசியப் பொலீஸாரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் திரட்டிய தகவல்களின்படி கொழும்பில் சில அசம்பாவிதங்களை ஏற்படுத்தி, மக்களைப் பீதியடையச் செய்யும் சதித்திட்டம் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. புலிகள் இதனைச் செய்யவில்லை. சில கட்சிகளும், ஒரு மூன்றாவது சக்தியும் பின்னணியில் செயல்படுகின்றன. தேசிய சொத்துகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டியது அரசின் கடமை. இதனாலேயே பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளோம்"-என்றும் அமைச்சர் கூறினார்.

**கருணா வெளிநாடு செல்லவில்லை**

"கருணா வெளிநாடு செல்லவில்லை. ஆனால், எங்கு இருக்கிறார் என்பது தெரியாது. இவ்விடயம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் தகவல் திரட்டுகின்றனர்" -எனக் கேள்வி ஒன்றுக்குப பதில் அளிக்கும்போது அமைச்சர் மங்கள குறிப்பிட்டார்.

"முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கருணாவின் குடும்பத்தினருக்கு விஸா பெற்றுக்கொடுத்ததாகக் கூறுகிறீர்கள் அப்படியானால் கருணா வெளிநாடு சென்று விட்டாரா?"- எனச் செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

"உங்களுடைய பதில்கள் முன்னுக்குப்பின் முரணாக இருக்கின்றன. கருணா எங்கே இருக்கின்றார் என்பது தெரியாது என்கிறீர்கள். ஆனால, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவருடன் பேச்சு நடத்துகிறார். அவர் பாதுகாப்பாகக் கொழும்பிலேயே இருக்கிறார் போலத் தோன்றுகின்றதே?" என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர்.

மேலும் "கருணா பாதுகாப்புக் கேட்டால், அதனை வழங்க அரசு தயாராக இருக்கின்றது என சென்ற வாரம் கூறினீர்கள். இப்போது உங்கள் நிலைப்பாடு என்ன?" - என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

"உங்களுடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என நீங்களும பாதுகாப்புக் கேட்டால் உங்களுக்கும் பாதுகாப்பு அளிப்போம். அது அரசின் கடமை" என மழுப்பல் பதில தந்தார் அமைச்சர் மங்கள.

**சமாதானப் பேச்சு விரைவில்**

ஜனாதிபதி சமாதான முன்னெடுப்புக்களைக் கைவிட்டு விடவில்லை. அதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன. சமாதானத் தூதுவரான எரிக சொல்ஹெய்ம் அடுத்த வாரமளவில் இங்குவரவுள்ளார். அவர் அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடி பேச்சுக்கான ஏற்பாடுகளைச் செய்வார் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.(ஐ-க)

## ஹலோ ரஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசமாகக் தாக்கியது. அதன் பின்னர் வாகனத் தரிப்பிடத்திற்குள் சென்ற அக்குழு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தியது.

இதில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த இரண்டு அம்புலன்ஸ் வாகனங்கள் உட்பட 6 வாகனங்கள் முற்றாக எரிந்து நாசமாகின.

மாநகரசபை தீயணைக்கும் படைபிரிவு மற்றும் பொலீஸ் தீயணைக்கும் படைப்பிரிவு என்பன சம்பவ இடத்திற்கு உடன் விரைந்து தீயணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டன. இதனால், ஏனைய வாகனங்களுக்கு தீ பரவுவது தவிர்க்கப்பட்டது.

வாகனங்களுக்குத் தீயிட்டவர்கள் அங்கு தரித்து நின்ற மேலும் பதினொரு வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்து சேதமாக்கியுள்ளனர்.

இதனால் நிறுவனத்துக்கு பல கோடி ரூபா பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் அலுவலகங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து நேற்று முதல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் -

அது பூரணமடையும்வரை இந்நிறுவனத்தின் பணிகள் யாவும் ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் -

'ஹலோ ரஸ்ட்' நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் வலன் கும்றோவபி தெரிவித்தார்.

இதேவேளை, இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கான நான்கு பாதுகாப்பு ஊழியர்களில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-5-13-30-15)


**விற்பனையாளர் தேவை**

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் பான்ஸிக் கடைக்கு (ஆண்/பெண்) விற்பனையாளர்கள் தேவை. முழுமையான சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 2308
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(33381)(38)


# இலங்கைப் பிரச்சனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் பேசுவது என வற்புறுத்துவது வேறு. புலிகள் முதலாவதைத் தான் கேட்கின்றார்கள். அதற்கான யோசனை ஒன்றை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள் அவ்வளவே. எனவே, இதில் நாம் கண்டிக்க எதுவும் இல்லை" - என்றார் அவர்.

"ஆனால், புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை இலங்கையின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதை ஏன அமெரிக்கா ஆட்சேபிக்கவில்லை?'- என்று பதில் கேள்வி எழுப்பினார் அந்த ஆசிரியர்.

"அப்படியல்ல அது இரு தரப்புப் பேச்சுக்குரிய விடயமாக உள்ளது. எனவே அதில் இப்போது நாம் கருதத்துத் தெரிவிப்பது பொருத்தமற்றது. என்றாலும் புலிகள் இந்த யோசனையை வெளியிட்ட அடுத்த ஓரிரு நாள்களில் அது பற்றி அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் கருத்து வெளியிட்டிருந்தார். இலங்கை அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினரும் செய்துகொண்ட ஒஸ்லோ பிரகடனத்தை மீறுவது போல இந்த யோசனைகள் தென்படுகின்றன என்ற சாரப்பட அவர் அபபோது கருத்து வெளியிட்டிருந்தார்"- என்றார் அமெரிக்கத் தூதுவர்.

"ஆனாலும் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசி முடிவுகண்டு அதை நடைமுறைப்படுத்திய பின்னர்தான் இறுதித் தீர்வு குறித்துப் பேசலாம் என்கிறார்களே! அதை எப்படி ஏற்கமுடியும்?'- என்று தொடர்ந்தார் அந்தப் பத்திரிகை ஆசிரியர்.

அதற்குப் புன்முறுவலோடு பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் "எந்த இறுதி நடவடிக்கைக்கும் முன்னதாக இருப்பதுதானே இடைக்கால ஏற்பாடு எனப்படுகிறது. எனவே, இறுதிக்குப் போக முன்னர் இடைக்காலம் குறித்துப் பேசி முடிவெடுக்கவேண்டும். என்றாலும் இடைக்கால ஏற்பாடு இறுதித் தீர்வுடன் தொடர்பு பட்டிருக்கலாம்" என்று சாரப்பட பதில் கேள்வி கொடுத்தார்.

"இல்லையே! இலங்கையும் இந்தியாவும் கடந்த செப்ரெம்பரில் வெளியிட்ட கூட்டறிக்கையில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் காணப்படும் இடைக்கால ஏற்பாடு எதுவும் இறுதித் தீர்வின் அங்கமாகவே இருக்கமுடியும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்த விடயத்தில் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் கருத்து முரண்பாடு - அடிப்படை வேறுபாடு - உள்ளது என்று கொள்ளலாமா?" எனப் பத்திரிகை ஆசிரியர் பதில் கேள்வி போட்டார்.

"இல்லை, என்றாலும் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான விடயங்கள் குறித்து இங்கு கருத்துக்கூற நான் விரும்பவில்லை. ஆனாலும், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் இந்தியாவும் அமெரிக்காவும் தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றன. இலங்கைக்கு உதவும் நாடுகளின் நோர்வேக் கூட்டத்தில் இந்தியா பங்குபற்றவில்லை. அதனால் உதவும் நாடுகளின் இணைத் தலைமையில் இந்தியா இடம்பெறவில்லை. மற்றபடி, இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள், அதன் ஆட்புல ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அமைதித் தீர்வு காணப்படவேண்டும் என்பதிலும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தங்களுக்குள்ளேயே பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதிலும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் கருத்து வேறுபாடு ஏதும் இல்லை" - என்றார் அமெரிக்கத் தூதர்.

## முத்தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மீண்டதும் மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடும் அவர் ஜூலை முதல் வாரத்தில் ஒஸ்லோ திரும்புவார்.

பின்பு ஜூலை முதல் வாரத்திலேயே நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், எரிக் சொல்ஹெய்ம் ஆகிய இருவரும் புதுடில்லி செல்வார்கள் எனத் தெரிகின்றது. ஜூலை 6ஆம்திகதி புதுடில்லியில் இந்திய அரசுத் தலைவர்களோடு இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து அவர்கள் கலந்துரையாடுவார்கள்.

அதை முடித்துக்கொண்டு ஜூலை 7ஆம் திகதி லண்டன் செல்லும் அவர்கள், அங்கு விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு நோர்வேத் தரப்பின் முத்தரப்பு இராஜதந்திர ஓட்டம் தொடரும் எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் -

நோர்வே அனுசரணைக்குழுவில் ஈடுபட்டுள்ள அந்நாட்டுப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெலகிஸன் (வயது36) எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி சுவீடனில் திருமணம் செய்கின்றார். அவர் திருமணம் செய்யப் போகும் அவரது காதலி சுவீடனைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கலை ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் ஆலோசனை நடத்திய பின் தமது போராட்டத்தை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை-

நாளை சனிக்கிழமை நடைபெறும யாழ்.பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தின் பின்பே தமது சங்கத்தின் இறுதி முடிவு அறிவிக்கப்படும் எனவும் -


பேரவையின் கூட்டத்தின் பின்னா சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திற்கு முன்பாக ஒன்றுகூடுமாறு ஊழியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.(ஐ-5-6)


தூய ஆவியின் வழிநடத்தலில் வாழ விரும்பும்
இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அன்பான அழைப்பு



அருட்தந்தை
**போல் ரொபின்சன் அடிகளின்**
வழிநடத்தலில்
**இரண்டு முழுநாள்கள் தியானம்**
ஜூன் 29 செவ்வாய் காலை 9மணிமுதல்
ஜூன் 30 புதன் இரவுவரை
**யாழ்.மரியன்னை பேராலயத்தில்**
(தூர இடங்களிலிருந்து வருவோருக்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தேவையானோர் ஜூன் 27 ஆம் திகதிக்கு முன் அறிவிக்கவும். இரண்டு தினங்களுக்கும் ஒருவருக்கான கட்டணம் 150ரூபா)

இளையோராக ஒன்றிணைந்து இறைவார்த்தை கேட்டு
இறைபுகழ்பாடி இறை அனுபவம் பெற்று
வாழ்வில் நிறைவும் மகிழ்வும் காண ஓர் அரிய வாய்ப்பு!



**போல் ரொபின்சன் அடிகளாரின் இறைதியான குணமாக்கல் வழிபாடுகள்**
**(எல்லோருக்கும் பொதுவானவை)**

28-06-2004) திங்கள் மாலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை பண்டத்தரிப்பு பத்திமா திருத்தலத்தில்
29-06-2004 செவ்வாய் மாலை 6.00 மணி முதல் 10.00 மணிவரை குருநகர் மைதானத்தில்
30-06-2004 புதன் மாலை 6.00மணி முதல் 10.00 மணிவரை யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில்
01-07-2004 வியாழன் காலை 8.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில்.

(இருநாள் தியானத்தில் பங்குபற்றும் இளையோர் மாலையில் பொதுவழிபாடுகளிலும் பங்குபெறுவர்)

**இளையோர் ஆணைக்குழுவும்**
**இறைதியான குழுவினரும்**

தொடர்புகளுக்கு:
வழிபாட்டு நிலையச் செயலகம்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

(சி35756)(37-14-16)



**BRIGHTMAN**
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்
பிரிவு 3 ▶ 3 மாதகாலத்தில் சரளமாக உரையாட
**சிங்களம்**
BY: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 26.06.2004
(Sat) 5.00 pm.
Sat,Sun- 5.00pm (O.T.)
(33448)(40)



**CHEMISTRY GROUP**
By: VAKEESAN
**GENERAL CHEMISTRY**
ஆரம்பம்
25/06/04 வெள்ளி
Fri, Sat, Sun, Mon- 5.30p.m.
&
Sat, Sun. - 3.30 p.m.
★ தொடர்பு:-0777593793
★ யாவும் புதிய நேரப்படி
பல்கலைக்கழகம் முன்பாக
திருநெல்வேலி
(33437)(38)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி அமிர்தலிங்கம்

சாவகச்சேரி, பெரிய அரசடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி அமிர்தலிங்கம் நேற்று (24.06.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகதாசன் - வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற பேரம்பலம் -சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் சாரதா பர்குணன், கிருஸ்ணதாசன், கோகிலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கமலாதேவி, தில்லைநாயகி, மகேஸ்வரி, ஆறுமுகம், நாகராசா ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2004) வெள்ளிக்கிழமை பி.ப.4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியஅரசடி வீதி,*
*சாவகச்சேரி.*

(33475)(37-14-16)

தகவல்:
அமிர்தலிங்கம் (கணவர்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.